பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 20 ஞாயிற்றுக்கிழமை 03.03.2024 கதிர் 117

# சாந்தனுக்காக இன்று துக்கநாள் பொது அமைப்புகள் அழைப்பு

## வவுனியா முதல் யாழ்ப்பாணம் வரை வரும் வழியில் அஞ்சலி நிகழ்வுகள்

அரசியல் கைதி தில்லையம்பலம் சுதேந்திரராஜா என்றழைக்கப்படும் சாந்தனின் புகழுடல் இன்று மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ள நிலையில் இந்த நாளை தமிழ்த் தேசிய துக்கநாளாக அனுஸ்டிக்கப் பொது அமைப்புக்கள் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளன.

நாளையதினமான ஞாயிற்றுக் கிழமையினை தமிழ்த் தேசிய துக்கதினமாக அனுஸ்டிக்கப் பொது அமைப்புக்கள் நேற்று ஒன்றுகூடித் தீர்மானித்துள்ளன என்று அறிவித்துள்ள குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸநாயக்க மார்ச் நடுப்பகுதியிலும் ஏப்ரல் முதல் வாரத்திலும் வடக்கு மாகாணத்திற்கு வருகை தரவுள்ளார். இந்தப் பயணத்தின் போது அவர் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடனும் பேச்சு நடத்தவுள்ளார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனுரகுமார, தமிழ் மக்களின் ஆதரவைத் பெறும் பொருட்டு இந்தச் சந்திப்புக்களில் ஈடுபடுவார் என்று தெரிகின்றது.

மார் 16ஆம் திகதி கிளிநொச்சி வரும் அவர் மக்கள் சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளதோடு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அன்றைய தினமே வவுனியாவுக்குத் திரும்பிச் செல்லும் அவர் அங்கும் மக்கள் ☞2

## ரொனி டி மெலுடனான அனுபவமே எனது ஊக்கி

### ஜனாதிபதி கருத்து

திறமையான அரசியல்வாதியும் சிறந்தப் பொருளாதார நிபுணருமான முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெலுடன் இணைந்து பணியாற்றிய அனுபவம், தனது தற்கால அரசியல் செயற்பாடுகளுக்கு உக்கமளிப்பதாக அமைந்துள்ளதென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ருஹுணு பல்கலைக்கழக விளையாட்டரங்கில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற ரொனி டி மெல்லின் ☞2 இறுதிக்கிரியை நிகழ்வின்போதே

# இலங்கையில் ஜனநாயகம் பெயரளவில் மட்டுமே

## எதிர்க் கட்சித் தலைவர் விமசர்னம்

எமது நாட்டில் ஜனநாயகத்தின் 3 முக்கிய தூண்களான நிறைவேற்றுநர், சட்டமன்றம் மற்றும் நீதித்துறை என்பன இருந்தாலும், ஜனநாயகம் பெயரளவில் மட்டுமே செயல்படுகிறது. நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மையானவர்கள் ஊழல்வாதிகளைப் பாதுகாக்கின்றனர். திருட்டு, இலஞ்சம் மற்றும் மோசடிகளைப் பாதுகாத்து வருகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் 113 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், ஹம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம, தெபரவெள, ஜனாதிபதி கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் நேற்றையதினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில மாதங்களுக்கு முன்னர், ☞2

# அதிகபட்ச சில்லறை விலை; முட்டைக்கு நிர்ணயியுங்கள்

## கால்நடை சுகாதாரத் திணைக்களம் பரிந்துரை

முட்டைக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்குமாறு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் ஆளும் தரப்புக்குப் பரிந்துரைத்துள்ளது. அதனை ஏற்று அடுத்த வாரம் கட்டுப்பாட்டு விலை பரிந்துரைக்கப்படும் என்று விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் கால்நடை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.எல்.ஹேரத் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற முட்டை உற்பத்தி மற்றும் விலை தொடர்பான கலந்துரையாடலின் போதே இந்தப் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு காலத்தை முன்னிட்டு முட்டைகளுக்கு ☞2

# படகுகள் விபத்தில் 7 பேர் படுகாயம்

## பாலைதீவு திருவிழாவிற்கு சென்றபோது சம்பவம்

பாலைதீவு திருவிழாவுக்குச் சென்ற படகுகள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஏழு பேர் காயமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாலைதீவில் உள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தின் தவக்கால திருத்தல வருடாந்த திருவிழா நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இதற்காகப் பெருமளவான பக்தர்கள் தமது படகுகளில் ஆலயத்திற்குச் சென்றனர். கடல்வழியாகச் சென்ற பக்தர்களின் இரண்டு படகுகள் மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

# யாழ். வணிகர் கழகம் தன்வந்துக்கு பாராட்டு




பாக்கு நீரிணையை நீந்தி சாதனை படைத்த திருகோணமலை ஷ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவன் ஹரிஹரன் தன்வந்தை யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினர் நேற்றுப் பிற்பகல் பாராட்டிக் கௌரவித்தனர்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. கழக தலைவர் ☞2

# விவசாய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முன்னுரிமை

## திருகோணமலை மாவட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் பல சவால்களைக் கடக்க வேண்டியுள்ளபோதிலும், விவசாய சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்தார்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரலவின் அழைப்பையேற்று நேற்று தம்லகமுவ பிரதேசச் செயலாளர் பிரிவின் கலமெடியாவ கிராமத்தின் நெல் அறுவடையைக் கண்காணிக்கச் சென்றிருந்த வேளையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் எம்மிடம் உள்ளது. திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகத்திற்கு மேலதிகமாக, இந்தியாவில் இருந்து குழாய் மூலம் எரிபொருளை விநியோகிக்கும் திட்டமும் உள்ளது. சுற்றுலா மட்டுமின்றி, வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்தி முதலீட்டு வலயங்களை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தை கிழக்கின் பிரதான துறைமுகமாக அபிவிருத்தி செய்து அதன் ஊடாக தென்னிந்தியாவின் உற்பத்திகளை பரிமாறிக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டங்கள் திருகோணமலை மாவட்டத்தில் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்தும்.

திருகோணமலை மாவட்டத்தில் விவசாய தொழில், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடிகைத்தொழில் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கிறோம். இப்பகுதியில் விவசாயத் தொழிலை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த யோசனையைப் ☞2

# இந்தியத் துணைத் தூதரக முற்றுகை; யாழ். மீனவர்கள் மீண்டும் அறிவிப்பு

இலங்கைக் கடல் எல்லை தாண்டி வந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளைக் கண்டித்தும் இந்த ஆக்கிரமிப்பை உடனடியாகத் தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் நாளை திங்கட்கிழமை, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடப்போவதாக மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த மாத இறுதியிலும் மீனவர்கள் இவ்வாறான ஒரு முற்றுகைப் போராட்டத்தை அறிவித்திருந்தார்கள். எனினும் அவர்கள் தூதரகத்தை முற்றுகையிடவிடாமல் வீதியிலேயே மறிக்கப்பட்டார்கள்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் இருந்து நாளை ஊர்வலமாகப் புறப்பட்டுச் சென்று துணைத் தூதரகத்தை முற்றுகையிடப்போவதாக வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் எம்.வி. சுப்பிரமணியம் தெரிவித்தார். நேற்று அவரது இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணைதுாயத்தின் பொது சபை கூட்டம் பெப்ரவரி 23, முல்லைத்தீவிலே நடைபெற்றது. அந்த கூட்டத்தில் மார்ச் 5 இந்திய துணை தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராடுவது என்று முடிவு செய்திருந்தோம்.

இந்த போராட்டத்தை ஆக்கபூர்வமான, ஒரு உணர்ச்சிபூர்வமான போராட்டமாக மாற்ற வேண்டுமாக இருந்தால், பொது அமைப்புகள், கடல் தொழிலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் அதில் முழுமையாகப் பங்கேற்க வேண்டும்.

இந்தியாவிலிருந்து வருகின்ற படகுகளை நிறுத்துவதற்கு இலங்கை அரசால் முடியாது. அரசு ஏமாற்றிக்கொண்டிருக்கிறது. இந்திய அரசு நடித்துக்கொண்டும் ஏமாற்றிக் கொண்டும் இருக்கிறது

இதனால் வடபுலத்திலே வாழ்கின்ற மீனவர்கள் தொடர்ச்சியாகத் துன்பத்தையே அனுபவித்து வருகின்றார்கள். பல சவால்களுக்கு மத்தியிலேயே அவர்கள் தமது ☞2

# கொத்து, ப்ரைட்ரைஸ் உள்ளிட்ட உணவுகளின் விலை அதிகரிப்பு

உணவுகளின் விலைகளை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்தது.

அச்சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் இது குறித்துத் தெரிவித்ததாவது:

தேநீர் 5 ரூபாவினாலும் கொத்து, ப்ரைட்ரைஸ் 50 ரூபாவினாலும், பால் தேநீர் 10 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன், உணவுப் பொதி 25 ரூபாவினாலும், பரோட்டா மற்றும் முட்டை ரொட்டி 10 ரூபாவினாலும், சிற்றுண்டிகள் 10 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே விலை அதிகரிக்கப்பட்ட மூலப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படாமையினால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார். ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சந்திப்புக்களில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளை ஜே.வி.பி. செய்து வருகின்றது. வவுனியா சந்திப்பை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பும் அவர், மீண்டும் ஏப்ரல் 4 யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இரண்டு நாட்கள் தங்கியிருக்கத் திட்டமிட்டுள்ளதோடு அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசுவார். இலங்கை தமிழ் அரசு கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகியவற்றுடன் அப்போது பேசுவதற்கும் அவர் திட்டமிட்டுள்ளார். அதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே இடம்பெற்று வருகின்றன என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. அனுரவைச் சந்தித்துப் பேச தமிழ்க் கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்திருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, கடந்த மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளான தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து உரையாடியிருந்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அனுர போட்டியிடுவது என்று தீர்மானிக்கப்பட்ட பின்னர், தமிழ் மக்களின் ஆதரவு அவருக்குத் தேவையாக இருக்கின்றது. இதுவரையான நடுநிலையான கருத்துக் கணிப்புக்கள் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் வெற்றிபெறுவதற்கான தெளிவான வாய்ப்புக்கள் இல்லை என்றே கூறுகின்றன. சிங்கள வாக்குகள் வேட்பாளர்கள் மத்தியில் கணிசமாகப் பிரிக்கப்படும் நிலையில் தமிழர் மற்றும் முஸ்லிம்களின் ஆதரவு வாக்குகள் வெற்றியைத் தொடுவதற்கு மிக முக்கியமானது. எனவேதான் அனுர குமார திஸநாயக்க யாழ்ப்பாணத்திற்கே வந்து தமிழ்க் கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டவுள்ளார்.

அண்மையில் ஜேவிபி தலைவரை அழைத்து இந்தியா பேச்சு நடத்தியது. இந்திய எதிர்ப்பையே தனது அரசியல் அடிநாதமாகக் கொண்டிருந்த ஜேவிபி தலைவர் மற்றும் குழுவினர் இந்தியா சென்று அரசியல் சந்திப்புக்களில் ஈடுபட்டமை அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியிருந்தது. எனினும் நாடு திரும்பியதும், இந்தியா சென்றது நாடுகளுடனான உறவு தொடர்பானதே தவிர கட்சியின் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை என்று அறிவித்தார் அனுரா.

அதுபோன்றே தமிழர்கள் விடயத்திலும் அனுர இப்போது யாழ்ப்பாணத்திற்கு இறங்கிவரத் தயாராக இருக்கின்றார் என்றபோதும் வடக்கு கிழக்கு இணைப்பு, அரசியல் தீர்வு குறிப்பாக சமஷ்டி தொடர்பான அவரது நிலைப்பாடு என்பவற்றை அவர் தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது. இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து பிரித்தது ஜேவிபிதான். தமிழ் மக்களின் தாயகக் கோட்பாடின் நில இணைப்பைச் சிதைத்து தமிழர்களைப் பலவீனப்படுத்தியதில் ஜேவிபியின் பங்கைத் தமிழர்கள் அவ்வளவு இலகுவில் மறந்துவிடமாட்டார்கள்.

அதேபோன்று 2015 நல்லாட்சிக் காலத்தில் அதிகாரப் பகிர்வுக்கு ஜேவிபி கொள்கையளவில் தமிழ்க் கட்சிகளுடன் குறிப்பாக சுமந்திரனுடன் ஒரு இணக்கத்திற்கு வந்திருந்தது. ஜேவிபியின் அடிப்படைக் கொள்கை அதிகாரப் பகிர்வுக்கு எதிரானது என்றாலும் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாரப் பகிர்வை மையப்படுத்திய சமஷ்டியே தீர்வு என்று தமிழ்க் கட்சிகள் நம்புவதை ஏற்பது என்கிற அளவில் அந்த மாற்றம் இருந்தது. என்றாலும் ஜேவிபி அதனை ஒருபோதும் பகிரங்கமாக, வெளிப்படையாக அறிவித்ததில்லை.

தேர்தல் நெருங்குகின்ற நேரத்தில் அத்தகைய பகிரங்க அறிவிப்புக்களை விடுத்து சிங்களவர்கள் மத்தியில் தனது வெற்றிவாய்ப்பைச் சோதிக்கும் துணிவு ஜேவிபிக்கு இருக்கிறதா என்பது அனுரவின் யாழ்ப்பாணப் பயணத்தில் அவர் தமிழ்க் கட்சிகளுடன் நடத்தும் பேச்சுக்களில் தெரியவரும். அதிலும் தமிழ் அரசுக் கட்சியில் தமிழ்த் தேசியம் மீண்டும் காலூன்றிவிட்டதாக நம்பப்படும் நிலையில் அந்தக் கட்சிக்குமே ஜேவிபியுடனான சந்திப்பும் பேச்சும் அதன் கொள்கை நிலைப்பாடு தொடர்பான முதலாவது அக்கினிப் பரீட்சையாக அமையக்கூடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருந்துப்பொருள் கொள்வனவு செயன்முறையில் நடந்த மோசடி உண்மை வெளிவந்ததையடுத்து, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலியரம்புக்வெல்லவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்தது. இதன்போது சுகாதார அமைச்சரைப் பாதுகாப்பதில் ஆளும் தரப்பின் 113 உறுப்பினர்கள் ஈடுபட்டனர், நாட்டை ஆளும் ஜனாதிபதி அவரைப் பாதுகாக்க செயற்பட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் முக்கியத்துவம் தற்போது வெளிப்பட்டுள்ளது. நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகள் மூலம் இந்த மோசடி செயல்களுக்கு காரணமானவர்கள் தற்போது அம்பலமாகியுள்ளனர். அப்படி இருந்தும் நாடாளுமன்றத்தில் இந்தத் திருடர்களைப் பாதுகாக்க பெரும்பான்மையானவர்கள் முன்வந்தனர்.

முன்னதாக, பாடசாலை இசை வாத்தியக்குழுவுக்கான ஆடை மற்றும் பஸ் ஒன்றும் இப்பாடசாலைக்கு எதிர்க்கட்சித் தலைவரால் வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும் என்பதோடு, இது தவிர நடன மற்றும் அரங்கேற்றங்கள் குழுவுக்குத் தேவையான அணிகலன்களைப் பெற்றுக்கொள்ள ஒரு இலட்சம் ரூபா நன்கொடையும் இன்று வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டிற்குப் பயன் தராத திட்டங்களுக்கு பெரும் கடன் வாங்கி ஊழல், மோசடி, திருட்டு எனப் பெரிய அளவில் இயங்கிவருவதால் நமது நாடு 90 பில்லியன் டொலர் கடனாளியாக மாறியுள்ளது. ஒரு குடும்பம் நாட்டின் வளங்களைத் திருடி, நாட்டின் வளங்களை அழித்து, அவர்கள் விரும்பியபடி பரிவர்த்தனைகளை நடத்தியதே அதிக வற் மற்றும் வருமான வரி செலுத்துவதற்குக் காரணம்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் நாட்டை அழித்த இவர்களை வெளிப்படைத்தன்மையுடன் நீதிமன்றில் முன்னிறுத்தி தண்டித்து அந்த வளங்கள் நாட்டுக்கு கொண்டு வரப்படும்.

இன்னும் வீட்டுப் பணியாளர்களை மட்டுமே நாம் வெளிநாட்டுக்கு அனுப்பி வருகிறோம்.

எமது நாட்டில் இன்றும் பெரும்பாலும் வீட்டு வேலையாட்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறைக்கு அனுப்பினாலும், இந்திய நாட்டவர்கள் அமெரிக்காவில் உள்ள சிலிக்கன் நகருக்கு சொப்ட்வேர் இன்ஜினியர்களாகச் செல்கிறார்கள். இந்தியாவில் தகவல் தொழிநுட்பப் புரட்சி பரவலாக்கப்பட்டதன் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தகவல் தொழிநுட்ப பாடத்திட்டம் தயாரிக்கப்பட்ட போது இந்தியாவில் யாரும் புரட்சி செய்ய வீதியில் இறங்கவில்லை. ஆனால் எமது நாட்டில் புதிய, சிறந்த, முக்கியமான மற்றும் நவீன விடயமொன்றைச் செய்ய முற்பட்டால் சில தரப்பினர் வீதியில் இறங்கி எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் யார் வீதிக்கு வந்தாலும் 10,126 அரச பாடசாலைகளில் பயிலும் 41 இலட்சம் மாணவர்களுக்காகவும் பெரும் கல்விச் சீர்திருத்தத்தை மேற்கொண்டு ஏற்படுத்த வேண்டிய மாற்றத்தை நாம் ஏற்படுத்துவோம்.

எமது நாட்டில் டிஜிட்டல் புரட்சி ஏற்படும் என்று ஆட்சியாளர்கள் கூக்குரலிட்டாலும், நம் நாட்டில் கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கும் பணி தரம் 6-13 வரையே நடைபெறுகிறது. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் தரம் 1-13 வரை ஆங்கிலத்தில் கட்டாய பாடமாக தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கப்படும் - என்றார்.

## விவசாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறவே இன்று இங்கு வந்தோம்.

இது தொடர்பாக நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றி அறிந்து கொண்டேன். இது தொடர்பான அறிக்கைகளை வழங்குமாறு ஆளுநருக்கும் பிரதேசசபை உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளேன். இந்த அபிவிருத்தித் திட்டப் பணிகள் 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க எதிர்பார்க்கிறோம்.

விவசாயத்துறையை மேம்படுத்த வேண்டும். போட்டித்தன்மை மிக்க விவசாயத் தொழில் துறையை உருவாக்க வேண்டும். சிறிய குளங்களை புனரமைத்து, அவற்றைப் பயன்படுத்த விவசாயிகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். மேலும், பயிர்ச்செய்கை மற்றும் அறுவடை குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக அரச மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் விவசாய நிலையங்களை விவசாய நவீனமயமாக்கல் மத்தியஸ்தானங்களாக கட்டமைக்க வேண்டும்.

அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு விவசாய சேவை நிலையம் என்ற அடிப்படையில் 25 நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கான ஆதரவை அமெரிக்காவின் பில் மெலிண்டா கேட்ஸ் மன்றமும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை இந்தியாவும் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்கால இளைஞர்கள் சமூகம் 'ஸ்மார்ட் அக்ரிகல்சரில்' மீதே ஆர்வம் காட்டுகின்றனர். இரண்டு ஏக்கர் காணியை வழங்குவதால் மாத்திரம் விவசாயத்தில் ஈடுபடமாட்டர்கள். எனவே, புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய 'ஸ்மார்ட் அக்ரிகல்ச்சர்' மூலம் அவர்களை அணுக வேண்டும்.

முன்னைய காலத்தைப் போல் நாட்டிலிருந்து பயிர்கள் ஏற்றுமதி செய்யும் நிலையை அடைய வேண்டும். சுதந்திரத்திற்குப் பின்னர் நாம் ஏற்றுமதியில் போதிய கவனம் செலுத்தவில்லை. இப்போது நாம் அதை ஆரம்பிக்க வேண்டும். இந்த நாட்டின் மிகப்பெரிய விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் இன்னும் சில மாதங்களில் ஆரம்பிக்கப்படும். நன்னீர் மீன்பிடி மற்றும் சுற்றுலா வியாபாரம் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

இலவச காணி உறுதிப்பத்திரம் வழங்கும் 'உறுமய' திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம். இது மூன்று பகுதிகளாக செயல்படுகிறது. அதன்படி, இந்த வருடம் பிரச்சினைகள் அற்ற வகையில் அளவீட்டுப் பணிகளை மேற்கொண்டிருக்கும், சுவர்ண பூமி, ஜயபூமி காணி உறுதிபத்திர உரிமையாளர்களுக்கு முதலில் இலவச காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இதற்கிடையில், அளவீடு செய்யப்படாத காணிகளை அளவிடும் பணியும் முன்னெடுக்கப்படும். காணி பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்கவும் எதிர்பார்கிறோம். அதன்படி ஒரு பிரதேச செயலகத்தில் நாளாந்தம் 500-1000 காணி உறுதிப்பத்திரங்களை குறைந்த பட்சமாக பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்திருக்கிறோம் என்றார்.

## சாந்தனுக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைப்பாளர் முருகையா கோமகன் நாளை தேவையற்ற களியாட்ட நிகழ்வுகளைத் தவிர்த்து அமரர் சாந்தனிற்கு அனைவரும் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தவேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

தமிழ்நாட்டில் நோய்வாய்ப்பட்டு உயிர் துறந்த அரசியல் கைதி தில்லையம்பலம் சுதேந்திரராஜாவின் (சாந்தன்) புகழுடல் இன்று அவரது தாய் மண்ணிற்கு எடுத்துவரப் படவுள்ளது.

காலை 8 மணிக்கு வவுனியாவில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும் சாந்தனின் புகழுடல் தொடர்ந்து மாங்குளம் பகுதிக்கு 9.00 மணிக்கு எடுத்துவரப்படவுள்ளது. காலை 10.30 மணிக்கு கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலியின் பின்னராக யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கொடிகாமம் நெல்லியடி ஊடாக அவரது பிறந்த மண்ணான உடுப்பிட்டிக்கு எடுத்துவரப்பட்டு வல்வெட்டித்துறை தீருவிலில் பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிவரை மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளது.

மாலை அவரது வீட்டிற்கு எடுத்துச்செல்லப்படும் புகழுடல் மறுநாள் திங்கட்கிழமை அவரது குடும்ப மயானமான எள்ளங்குளம் மயானத்தில் அடக்கம் செய்யப் படவுள்ளது.

வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ள அஞ்சலி நிகழ்வுகளில் வேறுபாடுகளைக் களைந்து அனைவரையும் அணி திரண்டு அஞ்சலி செலுத்த அழைப்பு விடுத்துள்ள பொது அமைப்புக்கள் அனைத்து இடங்களிலும் நீதி கோரியும் துக்கதினத்தை நினைவு கூரும் வகையிலும் கறுப்பு கொடிகளைக் தொங்கவிடவும் கோரிக்கை விடுத்துள்ளன.

இறுதி நினைவஞ்சலி நடத்தப் படவுள்ள வல்வெட்டித்துறை தீருவிலில் அனைவரையும் திரண்டுவர அழைப்பு விடுத்துள்ள பொது அமைப்புக்கள் இறுதிக் கிரியைகள் நடைபெறும் திங்கட்கிழமை குடும்பத்தவர்கள் மற்றும் ஊர் மக்கள் அஞ்சலி செலுத்தவும் ஒத்துழைக்கவும் கோரிக்கை விடுத்துள்ளன.

## அதிகபட்ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்கையாகத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த சில முட்டை உற்பத்தியாளர்கள் முயற்சிக்கின்றனர் என்று கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலைமைக்கு முகங்கொடுக்கும் வகையில், உள்நாட்டு சந்தையில் முட்டைகள் கிடைப்பதற்கான வழிவகையை ஊக்குவிக்கும் வேலைத் திட்டத்தை ஆளும் தரப்பு நடைமுறைப்படுத்தியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர இங்கு தெரிவித்தார். புத்தாண்டு மாதத்திலும் தட்டுப்பாடின்றி முட்டைகளை விநியோகிப்பது தொடர்பில் ஆளும் தரப்புக் கவனம் செலுத்தியுள்ளது.

இந்த கலந்துரையாடலின்போது, முட்டைகள் விற்கப்படவேண்டிய அதிகபட்ச சில்லறை விலையொன்றை முன்வைக்குமாறு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி ஹேமாலி கொத்தலாவலவிற்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை வழங்கினார்.

இதற்கமைய, அதிகபட்ச சில்லறை விலை அடுத்த வாரம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் முட்டை ஒன்றின் உற்பத்திச் செலவு 30 ரூபாவாக காணப்பட்ட போதிலும், சந்தையில் உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 60 ரூபாவாக அதிகரித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இ.ஜெயசேகரன் உள்ளிட்ட வணிகர் கழக உறுப்பினர்கள், கலந்து கொண்டிருந்தனர்.

தனுஷ்கோடியில் இருந்து பாக்கு நீரிணை வழியாகத் தலைமன்னார் வரை நீந்தி 13 வயதுடைய ஹரிஹரன் தன்வந் வெள்ளிக்கிழமை சாதனை நிகழ்த்தினார்.

திருகோணமலை ஷ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவரான தன்வந் அதிகாலை 4.15 அளவில் தனுஷ்கோடியிலிருந்து நீந்தத் தொடங்கி பகல் 1.47 அளவில் தலைமன்னாரை வந்தடைந்தார்.

தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னாருக்கான 30 கிலோ மீற்றர் தூரத்தை அவர் 9 மணித்தியாலங்கள் 32 நிமிடங்கள் 49 விநாடிகளில் நீந்திக் கடந்து சாதித்தார்.

## இந்தியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்களை தக்கவைத்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலைமைக்கு போர் ஒரு முக்கிய காரணமாக இருந்தாலும், இந்திய இழுவைமடிப் படகினுடைய அத்துமீறிய வருகையும், கேட்டபோது 'எங்களது எல்லையில் மீன்கள் இல்லை, வளங்கள் அழிந்துவிட்டன. ஆகையால் தான் இங்கே வருகின்றோம்' என சொல்கின்றார்கள். ஆனால் சென்னையில் இருந்து வெளிநாட்டுக்கு மீன்களை அனுப்புகின்றார்கள். அது எங்கே பிடிக்கப்பட்ட மீன்?

எங்களுடைய வளங்களை அள்ளிக்கொண்டு போய் நீங்கள் வெளிநாடுகளுக்கு விற்றுவிட்டு, அங்கிருந்து வருகின்ற அந்நியச் செலாவணியை எடுத்து உங்களுக்கு மட்டுமல்ல. நாடு முழுவதற்கும் கொடுத்துவிட்டு எங்களுடைய வலைகளை அறுத்து எங்கள் வாழ்வாதாரத்தையே நாசமாக்குகிறீர்கள்.

'இப்படி செய்தவர்களது படகுகளை எரிக்க வேண்டும், இப்படி செய்தவர்களை அடித்து துரத்த வேண்டும்' என்ற ஆதங்கத்தில் பேசினால் நீங்கள் கோபப்படுகிறீர்கள். அறுக்கப்பட்டவர்கள் அழுகின்றோம். காரணம் இருக்கிறது. அறுத்துப் போட்டுவிட்டுப் போன நீங்கள் கோபப்படுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

ஒரு நாளைக்கு மூன்று தடவை உங்களது படகுகள் வந்து எங்களது வளங்களை அள்ளிச் செல்கின்றன. சாதாரணமாக ஒரு தடவையில் ஒரு படகில் பத்தாயிரம் முதல் முப்பதாயிரம் இந்திய ரூபாய் பெறுமதியான மீனைப் பிடித்துச் செல்கிறீர்கள். இந்த முப்பதாயிரம் ரூபா இலங்கை காசுக்கு ஏறக்குறைய ஒன்றே கால் இலட்சத்துக்கு மேலே வரும்.

அந்த வகையில் ஒரு படகு ஒரு வருஷத்துக்கு 60 கோடிக்கு அதிகமான மீனை பிடித்துக்கொண்டு போகின்றது. இதை உங்களது 2500 படகினால் பெருக்கிப் பாருங்கள். எத்தனை ஆயிரம் கோடியை நீங்கள் கொண்டு போகிறீர்கள் என்று.

ஏறக்குறைய 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு பிறகு 40 வருட காலமாக எங்களது கடலை வாரிச் செல்கின்றீர்கள். எத்தனை ஆயிரம் கோடிகளை கொண்டு போய்விட்டீர்கள். ஆனால் எமது அகதிகளை உங்கள் வரிப்பணத்தில் பாதுகாப்பதாகக் கொக்கரிக்கின்றீர்கள். எங்களது கடலை எங்களிடம் விடுங்கள். நாங்கள் எங்களுக்கு கிடைக்கின்ற வருவாயில் அகதிகளுக்கு காசு அனுப்புகிறோம் என்றார்.

## ரொனி டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரொனி டி மெல் ஒரு நாள் என்னிடம் பேசி அவரைச் சந்திக்கச் சொன்னார். நாங்கள் சிறிது நேரம் உரையாடிய பின்னர், எனது மரணத்திற்குப் பின்னர், நீங்களும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இறுதிச் சடங்கு சபைக்கு வந்து உரையாற்ற வேண்டுமென கேட்டுக்கொண்டார். அதன்படியே இன்று இருவரும் இந்நிகழ்வில் பங்கேற்கிறோம்.

ரொனி டி மெல் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்ததன் பின்பே அவரை நன்கு அறிந்துகொண்டேன். அதற்கு முன் அவரை நான் சிறுவயதில் சந்தித்திருக்கிறேன். பின்னர் 1970 இல் அவர் பாராளுமன்றத்திற்கு தெரிவாகினார். பின்னர் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அரசாங்கத்தில் அங்கம் வகித்தார். அதில் எனக்கும் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இதன் போதே ரோனி டி மெல்லின் திறமையை அறிந்துகொண்டேன்.

இந்தப் பிரதேசங்களில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிக்காக அவர் பெரும் பணியாற்றினார். அதனை நன்கறிவோம். அன்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் பெரும் மக்கள் அலை திரண்டது. ஆனால் மக்கள் அலை இருப்பதை மாத்திரம் நினைத்துகொண்டிருக்கவேண்டாம், நாம் தேர்தலை வெற்றிகொள்ள வேண்டுமென ஜே.ஆர் ஜயவர்தன கூறினார். அப்போது ரொனி டி மெல் மக்கள் விடுதலை முன்னணியின் வாக்குகளையும் பெற்றுத்தருவேன் என உறுதியளித்தார்.

அவர் அவ்வப்போது சிறைச்சாலைக்குச் சென்று ரோஹன விஜேவீரவைச் சந்தித்திருந்தார். இறுதியில் அவர்களுக்கு ஆதரவளிக்கும் மக்கள் அனைவரும் ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களித்ததால் விஜேவீரவை சிறையில்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகவியலாளர் தவசீலன் மீதான வழக்கு விசாரணை மார்ச் 28 இல்

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவரும் முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளருமான சண்முகம் தவசீலன் மீது முல்லைத்தீவு கோட்டா பய கடற்படை முகாமின் கடற்படை புலனாய்வு அதிகாரி ஒருவர் திட்டமிட்டு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைக்காக அழைக்கப்பட்ட அவர் முல்லைத்தீவு பொலிஸாரால் 20.04.2019 அன்று கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் அவர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டு கடந்த பல வருடங்களாக வழக்கு இடம்பெற்று வரும் நிலையில், கடந்த 04.05.2023 அன்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றபோது வழக்குடன் தொடர்புடைய கடற்படை புலனாய்வாளர் தொடர்ச்சியாக வழக்கு விசாரணைகளுக்கு வருவதில்லை எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் குறித்த கடற்படை புலனாய்வாளருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதோடு வழக்கு விசாரணைகள் 2023-09-21 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டிருந்தது

இந்நிலையில் 2023-09-21 அன்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் சார்பாக சட்டத்தரணி வி எஸ் எஸ் தனஞ்சயன் முன்னிலையாகியிருந்தார் அன்றும் வழக்கு தொடுநரான குறித்த கடற்படை புலனாய்வாளர் வருகைதரவில்லை இந்நிலையில் குறித்த கடற்படை புலனாய்வாளருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளதாக பொலிஸார் நீதிபதிக்கு தெரிவித்தனர் . இந்நிலையில் குறித்த கடற்படை புலனாய்வாளர் மற்றும் அவரது சாட்சி ஆகிய இருவருக்கும் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வழக்கு 2024.02.29 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது

இந்நிலையில் கடந்த 29 ஆம் திகதி குறித்த வழக்கானது முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் சார்பாக சட்டத்தரணி வி எஸ் எஸ் தனஞ்சயன் முன்னிலையாகியிருந்தார் குறித்த கடற்படை புலனாய்வாளரும் வருகைதந்திருந்தார். ஊடகவியலாளருமான சண்முகம் தவசீலன் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் வழக்கு விளக்கத்துக்காக மார்ச் 28 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 07.04.2019 அன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலத்தில் இருந்து வட்டுவாகல் பாலம் வரை கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தார்.இதன் போது செல்வபுரம் பஸ் நிலையத்தில் ஒளித்திருந்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களையும், ஊடகவியலாளர்களையும் இனம் தெரியாத நபர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்ததோடு தனது கைபேசியில் ஒளிப்படம் எடுத்துள்ளார்.

இதன் போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரை அடையாளப்படுத்த முற்பட்டவேளை அவர் யார் என சொல்ல மறுத்து குறித்த இடத்தினை விட்டு தப்பி ஓடிய போது ஆர்ப்பாட்டக்காரர்களால் பிடிக்கப்பட்டு மீண்டும் விசாரித்த போது ஊடகவியலாளரான சண்முகம் தவசீலன் தலையிட்டு குறித்த நபர் யார் என வினவியபோது, அதற்கு தான் கடற்படை அதிகாரி எனத் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, முல்லைத்தீவு பொலிஸாரை சம்பவ இடத்திற்கு வருமாறு அழைத்தபோது அவர்கள் குறித்த இடத்திற்கு வர தாமதமாகியுள்ளது. மேற்படி நபரை வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று அவர் கடற்படையினை சேர்ந்தவரா என வினவியபோது, அவர் தங்களுடைய நபர் என கடற்படையினர் தெரிவித்ததுடன், அவரை குறித்த இடத்தில் வருகை தந்த பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்நிலையில், தொடர்ந்து குறித்த கடற்படை அதிகாரி ஊடகவியலாளர்களை பழிவாங்கும் நோக்கில் அன்று மாலை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் உண்மைக்கு புறம்பான கருத்தினை தெரிவித்து முறைப்பாடு செய்துள்ளார்

இந்த சம்பவம் தொடர்பில் 20.04.2019 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் ஊடகவியலாளரான சண்முகம் தவசீலனை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னி லைபடுத்திய நிலையில், அவர் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு வழக்கு விசாரணைகள் தொடந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)






# சாதனை மாணவன் ஸயானுக்கு இறக்காமத்தில் பாராட்டு

(வி.ரி.சகாதேவராஜா)

தேசிய ரீதியில் சாதனை படைத்த மாணவன் ஸயானுக்கு இறக்காமத்தில் கடந்த வியாழக்கிழமை ஊர் பூராக சரமாரியாக பொன்னாடை போர்த்தி பாராட்டுக்கள் குவிந்தன.

சம்மாந்துறை வலயத்திலுள்ள இறக்காமம் அல்-அஷ்றப் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) இல் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவன் எம்.கே. யூசுப் ஸயான் கடந்த 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கை தேசிய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இப் பெறுபேறுகள் வியாழக்கிழமை வெளியாகின.

அதனைத் தொடர்ந்து இறக்காமம் பூராக மாணவன் ஸயான் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். படி வாகனத்தில் வரவேற்கப்பட்டார். கோலாகலமாக இப்பாராட்டு நிகழ்வு ஊர் பூராக இடம் பெற்றது.

செல்லுமிடமெல்லாம் சாதனை மாணவன் ஸயானுக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து பரிசுகளும் வழங்கினார்கள்.

இறக்காமம் பிரதேச செயலகம், பிரதேச சபை, கோட்ட பாடசாலைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள், கடைகள் அனைத்திலும் இக் கௌரவம் வழங்கப்பட்டது.

இவ்வெற்றி இப்பாடசாலைக்கும் இறக்காமத்திற்கும் கிடைத்த ஒரு சாதனையாகக் கருதப்படுகிறது.

குறித்த சாதனை செல்வன் யூசுப் ஸயான் எஸ்எல்எம். குத்தூஸ் ஆசிரியர், எஸ்.எல். பஸ்மியா ஆசிரியை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வருமாவார்.

வலயம் சார்பில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.வை.அறபாத் எ.எல்.எம்.மஜீத் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.எம். நிஷார் ஆசிரிய ஆலோசகர் எஸ்எல்ஏ. முனாவ் ஆகியோர் சமுகமளித்திருந்தனர. (05)





# நிந்தவூரில் களைகட்டிய உலக 'புவி நாள்' நிகழ்வு

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை நகர லயன்ஸ் கழகம் மற்றும் நிந்தவூர் சுப்ரீம் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து 2024 ஆம் ஆண்டு புவி தினத்தை நிந்தவூரில் பரந்த அளவில் கோலாகலமாகக் கொண்டாடியது. இந்த நிகழ்வின் போது மேற்கொள்ளப்பட்ட திட்டங்களில் கடற்கரையை சுத்தம் செய்தல், டெங்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரம் விநியோகம், புற்றுநோய் விழிப்புணர்வு துண்டு பிரசுரம் விநியோகம், பனை விதைகள் நடுதல், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வளாகத்தில் மரம் நடுதல் மற்றும் பங்கேற்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு 100 பலா செடிகள் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் அடங்கும். மேலும், டெங்குவை எதிர்த்துப் போராடுவதற்கும், பொலித்தீன் பெருக்கத்தைத் தடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கல்முனை லயன்ஸ் கழகத் தலைவர் எந்திரி. லயன் மதுரநாயகம் சுதர்சன் மற்றும் நிந்தவூர் சுப்ரீம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் அஷரூப் அர்ஷத் ஆகியோரின் திறமையான தலைமையின் கீழ், பல்வேறு சுற்றுச்சூழல் மற்றும் பொது சுகாதார பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஸ்ரீலங்கா லயன்ஸின் சுற்றாடல் தவிசாளர் முன்னாள் மாவட்ட ஆளுநர் ரொஷான் காஞ்சன யாப்பா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்ட சமூக சேவை நிறுவனங்களின் கூட்டமைப்பு, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், நிந்தவூர் பிரதேச சபை, பிரதேச செயலகம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மினா விளையாட்டுக் கழகம், மதீன விளையாட்டுக் கழகம், ஸ்ரீலங்கா ஸ்மார்ட் யூத் விளையாட்டுக் கழகம், பிரதேச சம்மேளன விளையாட்டுக் கழகம் மற்றும் நிந்தவூர் அல்அஸ்ரக் அல்மஸ்ஹர் மற்றும் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி (தேசிய பாடசாலை) ஆகியவற்றின் சுற்றாடல் கழகங்கள் ஆகியனவும் உதவின.

சம்மாந்துறை கோல்டன் சிட்டியின் லயன்ஸ் கழகம் மற்றும் சாய்ந்தமருது லயன்ஸ் கழக உறுப்பினர்களும் இந்த முயற்சிக்கு தமது ஆதரவை வழங்கினர்.

இந்நிகழ்வு 2024 பெப்ரவரி 25 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி 11.30 மணியளவில் நிந்தவூர் கடற்கரையில் நிறைவடைந்தது. பள்ளி மாணவர்கள் மற்றும் பெண்களின் குறிப்பிடத்தக்க ஈடுபாட்டுடன் சுமார் 400 நபர்கள் கடற்கரையை சுத்தம் செய்தனர்.

இந்த பூமி தின கொண்டாட்டம் சமூகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொது சுகாதார விழிப்புணர்வை வளர்ப்பதில் ஒத்துழைப்பு மற்றும் சமூக உணர்வின் சக்திக்கு ஒரு சான்றாக நிற்கிறது. மேலும், கல்முனை நகர லயன்ஸ் கழகம் இவ்வாறான செயற்திட்டங்களைக் காரைதீவு மற்றும் கல்லடி பிரதேசங்களில் இந்த வருடத்தில் முன்னெடுத்துள்ளது. லயன்ஸ் கல்முனை நகரம் ஏற்பாடு செய்த 3 ஆவது கடற்கரையை சுத்தப்படுத்தும் திட்டம் இதுவாகும். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீனவர் பிரச்சினை மீது அக்கறை செலுத்துங்கள்

இந்திய – இலங்கை மீனவர் பிரச்சினையை தேர்தல் காலங்களில் இரு தரப்பிலுமே கொம்பு சீவிவிட்டு வருகின்றார்களோ என்று தோன்றுகின்றது. அது நிறுத்தப்பட்டு உடனடியாக இந்தப் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு காணப்படவேண்டியது அவசியம்.

இந்திய மீனவர்கள் மூவர் இலங்கைச் சட்டங்களின்படி சிறையில் அடைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினையை இந்திய மீனவர்கள் தமது நாட்டில் பெரிதுபடுத்தினர். இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவைக்கான தேர்தல் வரவுள்ள நிலையில், மத்தியில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியை எதிர்கொள்ளத் திராவிடக் கட்சிகளுக்கு இதுவொரு நல்ல சந்தர்ப்பமாக இருக்கக்கூடும் என்பதால் இம்முறை போராட்டம் வீரியம் பெற்றது.

இந்தப் போராட்டங்களின் அரசியல் பின்னணி குறித்துச் சந்தேகிப்பதற்கு முக்கிய காரணம் ஒன்றுண்டு. ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட மீனவர் ஒருவர் மீண்டும் எல்லை மீறியதை அடுத்து அவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது, அதேபோன்று படகு உரிமையாளர் ஒருவருக்கும் தண்டனை விதிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்தே தமிழ்நாட்டின் தெற்குக் கரையில் போராட்டம் வெடித்தது. ஆனால், இதற்கு முன்னரும் இவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் எல்லை தாண்டியபோது அவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது போராட்டம் எதுவும் வெடிக்கவில்லை. எனவே இந்தப் போராட்டங்களுக்குப் பின்னணியில் அரசியல் களச் சூழல் பெரும் பங்கைக் கொண்டிருக்கின்றது என்பதை ஊகிப்பது கடினமானது அல்ல.

அதுபோன்றே கடந்த பல மாதங்களாகவே மீனவர்களின் இந்தப் பிரச்சினையை இலங்கையின் மீன்பிடித்துறை அமைச்சரான டக்ளஸ் தேவானந்தாவும் தூண்டிவிட்டு வருகின்றார். மீனவர்களை எல்லை தாண்டிச் சென்று போராட்டம் நடத்துமாறு ஊக்குவிப்பதில் இருந்து உண்டியல் குலுக்கி விமானப் பயணச் சீட்டு வாங்க ஊக்குவிப்பது வரையில் அவரது பின்புலத்திலும் பல காரியங்கள் நடந்து வருகின்றன.

இத்தகைய அரசியல் பின்புலங்களின் நடுவே, தூண்டல்களால் கட்டுப்பாட்டை இழந்து, வரன்முறைகளை மீறும் சிலர் விடும் வார்த்தைகள் இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலானதாக்கி முரண்பாடுகளைப் பெரிதுபடுத்துகின்றது. அதுபோன்றே தமிழ்நாடு தரப்பில் மீனவர் சங்கப் பிரதிநிதி ஒருவர், தமது வரிப்பணத்தில் ஈழத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டில் தங்கியிருக்க தம்மைத் தொழில் செய்யவிடாது முடக்கப்பார்க்கிறீர்களா என்று கொந்தளித்தது இந்தக் கரையில் உள்ள மீனவர்களைச் சீண்டியுள்ளது. குறிப்பிட்ட அந்தப் பிரதிநிதி தனது கருத்துக்களுக்காகப் பின்னர் மன்னிப்புக் கேட்டுவிட்டார் என்றபோதும், அவரால் உணர்ச்சிவசப்பட்ட இங்குள்ள மீனவர்கள் பதிலடி என்ற வகையில் தமது கருத்துக்களைத் தொடர்ந்து தெரிவித்து வருகின்றார்கள்.

இது இரு கரைகளிலும் உள்ள தொப்புள்கொடி உறவுகளைப் பெரிதும் பாதிக்கக்கூடிய விடயமாக அமைந்துள்ளதால் இந்தப் பிரச்சினை உடனடியாக ஒரு தீர்வுக்குக் கொண்டுவரப்படவேண்டும். இரு தரப்பிலும் மீனவர் பிரச்சினையை வைத்து அரசியல் செய்வதற்கு இடமளிக்கப்படக்கூடாது. இந்தியா எப்போதும் சொல்வதைப் போன்று மீனவர் பிரச்சினை மனிதாபிமான ரீதியில் அணுக்கப்பட்டுத் தீர்க்கப்படவேண்டுமே தவிர, அரசியல் அதற்குள் கலக்கப்படக்கூடாது. தமது உட்கட்சி அரசியலே கதி என்று கிடக்காது தமிழர் அரசியல் தலைமைகள் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு அமைதியையும் இணக்கத்தையும் ஏற்படுத்த முயற்சிக்கவேண்டும். அது அவர்களின் கடமையும் பொறுப்பும்கூட.



# பரப்புரை: ஒரு சமூக உளவியல் பார்வை

**டாக்டர். ஆ. காட்சன்**

ஒரு தனிநபரின் மனநலம் என்பது அவரது மரபணுக்களாலும், மனோபலத்தாலும் மட்டுமே தீர்மானிக்கப்படுவதில்லை. சமூக உளவியல், தனிநபரின் மனநலத்தில் பெரும் பங்காற்றுகிறது. அதில் குறிப்பாக அரசியல் சூழல், அரசின் மீதுள்ள நம்பிக்கை போன்றவை சமுதாயத்தை மட்டுமல்லாமல், தனிநபரின் மனநிலை, உளவியல், ஆளுமை வளர்ச்சியைத் தீர்மானிக்கும் பெரும்சக்திகளாக இருந்துவருகின்றன.

இந்தியர்களின் சமூக-பொருளாதார நிலையை வகைப்படுத்திய சமூக உளவியல் நிபுணரான பேராசிரியர் குப்புசாமி, பரப்புரை பற்றி எழுதியவை 60 ஆண்டுகளுக்குப் பிறகும்கூட இன்றைய அரசியல் பிரச்சாரத்துக்குப் பொருந்துவது, பரப்புரையின் ஸ்திரத்தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

பரப்புரையில் தலைமைத்துவத்தின் பங்கு: சமுதாயத்தில் நீண்டகாலமாக நிலவிவரும் ஒரு பிரச்சினையைத் தீர்க்க ரட்சகன் யாராவது வரமாட்டாரா என்று ஒரு சாரார் ஏங்கிநிற்கும் வேளையில், அவர்களின் உணர்வுகளைச் சரியாகப் புரிந்துவைத்து, தீர்வை நோக்கி நகரும் நபரை ஒரு சமூகம் தலைவராகத் தேர்ந்தெடுக்கிறது.

ஆனால், தீர்வை நோக்கிய ஆக்கபூர்வமான கருத்துகளைத் தனது பேச்சாற்றல் மூலம் வெளிப்படுத்தி, மக்களைத் தன்பக்கம் ஈர்த்துக்கொள்பவர்கள்தான் தலைவர்களாக நிலைத்து நிற்க முடியும். ஒரு தலைவரின் பரப்புரை எடுபடுவதற்கு அவர் கவர்ச்சிகரமான நபராக மட்டும் இருந்தால் போதாது மக்களின் வசீகரத்துக்கு ஆட்படத்தக்க மனநிலை (ளுரபபநளவடைடைவல ளவயவந) மிக அவசியம். அதேநேரத்தில், மக்களின் பிரச்சினைகளை மையப்படுத்துவதன் மூலம் மட்டுமே ஒருவர் தலைமைத்துவத்தை அடைந்துவிட முடியாது.

மையப்படுத்தப்பட்டுள்ள பிரச்சினையை ஆதரிக்கும் குழுக்களையும் எதிர்க்கும் குழுக்களையும் உளவியல் ரீதியாக உருவாக்கிய பின்னர், பல வழிமுறைகளில் தீர்வுகளைப் பரப்புரை செய்வதன் மூலமே, வழிநடத்தும் நபர் என்ற அடையாளத்தைப் பெற முடியும்.

ஒரு நிறுவனத்தின் தயாரிப்புக்காகச் செய்யப்படும் பரப்புரை விளம்பரங்கள் எவ்வளவு வசீகரமாக இருந்தாலும், அதை உள்வாங்கிக்கொண்டு ஏற்றுக்கொள்ளும் வசீகரத்துக்கு ஆட்படத்தக்க மனநிலை உள்ள வாடிக்கையாளர்களோ மக்களோ இல்லாவிட்டால், அந்தப் பரப்புரை வெற்றிபெறாது.

இதற்கு வசீகர முகமுள்ள, பிரபலமான, எல்லாப் பிரிவினருக்கும் நன்கு பரிச்சயமான நபர்கள் விளம்பர நிறுவனங்களுக்குத் தேவை. அப்படியான விளம்பரங்களை, வசீகரத்துக்கு ஆட்படத்தக்க மனநிலை உள்ள நபர்கள் அல்லது குழுக்கள் எந்தவித விமர்சன மதிப்பீட்டையோ பகுத்தறிவையோ பயன்படுத்தாமல் ஏற்றுக்கொள்வார்கள்.

இதற்காகத்தான் நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை மக்களிடம் கொண்டுசெல்லப் பிரபலமான நடிகர், நடிகைகள், விளையாட்டு வீரர்களை விளம்பரத் தூதுவர்களாகப் பயன்படுத்துகின்றன. இதே உத்தியை அரசியல் கட்சிகளும், கட்சியின் கொள்கை மற்றும் தேர்தல் பரப்புரைகளுக்குப் பயன்படுத்துவது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது பெருகிவருகிறது. பெரும்பான்மைக் கவர்ச்சி (Majority prestige) என்பது மனிதனின் உளவியலோடு கலந்த ஒன்று. 'இலங்கையில் பெரும்பான்மையான



நபர்கள் இந்தப் பற்பசையைத்தான் பயன்படுத்துகிறார்கள்' என்று புள்ளிவிவரத்தோடு வெளியிடப்படும் விளம்பரங்கள் எளிதில் வெற்றிபெறும். அதுவும் ஒரு பல் மருத்துவரே ஆய்வுக்கூடத்திலிருந்து பேசுவதைப் போல் சித்தரித்து காட்டப்படும் விளம்பரம் (Expert prestige suggestion) இன்னும் வலிமையாக இருக்கும்.

இது, 'நீங்களும் இந்தப் பெரும்பான்மைக் கூட்டத்தில் சேர்ந்துவிடுங்கள்' என்று விடுக்கப்படும் அழைப்பு. இதுபோலவே, 'வரும் தேர்தலில் இந்தக் கட்சி அல்லது தலைவர்தான் பெரும்பான்மையான இடங்களைப் பெறுவார்' என்று வெளியிடப்படும் கருத்துக்கணிப்புகள், மக்களின் மனதைப் பெரும்பான்மைக் கவர்ச்சியை நோக்கி திசைதிருப்பும் ஓர் உளவியல் உத்தியே.

கல்வியும் பரப்புரையும்: மேலோட்டமாகப் பார்த்தால் கல்வி, பரப்புரை இரண்டுமே மக்களின் மனநிலையை மாற்றும் குறிக்கோள் கொண்டவையாகவே தெரியும். இருந்தாலும், கல்வியினால் கிடைக்கும் அறிவு மட்டுமே பகுத்துச் சரிபார்க்கக்கூடியது. இந்த வித்தியாசத்தை உணர்ந்த நபர்கள் பொய்யான பரப்புரையை நம்புவதில்லை.

இதை உணர்ந்ததால் இரண்டாம் உலகப் போரின்போது இத்தாலி, ஜெர்மனி போன்ற அச்சு நாடுகளும், சோவியத் ரஷ்யா போன்ற நேச நாடுகளும் தங்கள் தலைவர்களைப் புகழ்ந்தும், எதிரிநாட்டுத் தலைவர்களை அழிக்கப்பட வேண்டியவர்களாகச் சித்தரித்தும், தாங்கள் போர் புரிய வேண்டிய அவசியத்தையும் வரலாற்றுப் பாடங்களில் கல்வி வாயிலாகப் புகுத்தி வெற்றியும் கண்டன.

பரப்புரையில் மொழியின் பங்கு: பரப்புரையில் நம்பிக்கையுள்ள தலைவர்களின் முதல் தேர்வு, மொழி. மக்களின் தேவையையும் உளவியலையும் உணர்ந்து, பரிச்சயமான மொழியில் உருவாக்கப்படும் முழக்கங்கள் (ளுடழபயளெ) தனிநபர் தொடங்கி, தேசிய அளவில் அரசியல் மாற்றங்களை விளைவிக்கும் ஆற்றல் படைத்தவை.

தமிழ்த் தேசியம் என்ற வார்த்தை முழக்கம் மாவட்ட, மாகாண எல்லைகளைக் கடந்தும் தேசங்களைக் கடந்தும் தமிழர்களை ஒருங்கிணைக்கும் ஆற்றல் படைத்தது. இதன் மற்றொரு நோக்கம் தங்களது பரப்புரையை மக்களின் மனதில் நிலைநாட்டி, அரசியல் பெரும்பான்மையைத் தக்கவைப்பதாகும். மொழியாற்றலும் பேச்சாற்றலும் மிக்கவர்கள் இலங்கைத் தமிழ் அரசியலில் செல்வாக்கு மிக்கவர்களாக உருவெடுத்திருந்த காலம் ஒன்று இருந்துள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க..)



# இந்தியத் தூதுவர் சந்தோஷை சந்தித்தார் அமைச்சர் ஜீவன்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கும், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பு வியாழக்கிழமை மாலை கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது.

இந்திய அரசின் நிதி பங்களிப்புடன் மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் சம்பந்தமாகவும், சமகால நிலைவரங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

மலையக மறுமலர்ச்சிக்காக இந்தியா வழங்கி வரும் அபிவிருத்திசார் பங்களிப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையக மாணவர்களுக்கு இந்தியா வழங்கிவரும் புலமைப்பரிசில் திட்டங்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

அதேவேளை இலங்கை, இந்தியாவுக்கிடையிலான உறவை மேம்படுத்துவதில் மலையக மக்களுக்குரிய வகிபாகம் பற்றியும் பேசப்பட்டுள்ளது. குறிப்பாக பாரத் - லங்கா வீட்டு திட்டம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (05)

# சந்தாங்கேணி நீச்சல் தடாகத்தை ஜூனுக்கு முன் திறக்க ஏற்பாடு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை சந்தாங்கேணி பொதுவிளையாட்டு மைதான நீச்சல்தடாகத்தை எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் மக்கள் பாவனைக்கு கையளிக்கும் விதமாக நிர்மாணப்பணிகள் முடுக்கிவிடப்பட்டு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், விளையாட்டுத்துறை முன்னாள் பிரதியமைச்சருமான, நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் முயற்சியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சந்தாங்கேணி பொதுவிளையாட்டு மைதான நீச்சல்தடாக நிர்மாணப்பணிகளை முடிவுக்கு கொண்டுவர தேவையான மிகுதி நிதி ஒதுக்கீடுகளை நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸின் வேண்டுகோளின் பேரில் விளையாட்டுத்துறை அமைச்சு ஒதுக்கியுள்ளது. நீச்சல்தடாக நிர்மாண பணிகளை களவிஜயம் செய்து பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நிர்மாணப்பணிகளை துரிதகதியில் முடிவுக்கு கொண்டுவரவேண்டிய அவசியம் தொடர்பாக ஒப்பந்தக்காரர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

இந்த களவிஜயத்தில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் அஸ்மி ஆதம்லெப்பை, மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே. எச்.ஜௌஸி, கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஏ. ஹலீலுர் ரஹ்மான், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர்கள் உட்பட கல்முனை மாநகர சபை அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir



# சடலம் ஒப்படைப்பு

(பாறுக் ஷிஹான்)

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் சிற்றூர்தி (வான்) மோதி உயிரிழந்த சிறுவனின் சடலம் குடும்பத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குப்பட்ட வீடு ஒன்றின் முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் வீட்டின் கதவு தற்செயலாக திறந்த நிலையில் வீதியை நோக்கி ஓடிய வேளை அவ்வழியால் வந்த பாடசாலை மாணவர்களை ஏற்றி செல்லும் வான் மோதியதில் வியாழக்கிழமை படுகாயமடைந்த சிறுவன் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்து சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் பெரிய நீலாவணை விஷ்ணு வித்தியாலய வீதியை சேர்ந்த 4 வயது மதிக்கத்தக்க அருணா ஹர்ஷான் என்பதுடன் விபத்தின் போது சிறுவனின் சகோதரியை ஏற்ற வந்த சிற்றூர்தி சிறுவனை மோதி ஒரு பக்க நெஞ்சு பகுதியில் ஏறி சென்றுள்ளதாக நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் கல்முனை ஆதார வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்த சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(05)



## தேசிய போட்டியில் வெற்றி பெற்ற மாணவருக்கு கல்வி அதிகாரிகள் பாடசாலை சென்று வாழ்த்து

(வி.ரி. சகாதேவராஜா)

தேசிய போட்டியில் வெற்றி பெற்ற சாதனை மாணவர்களை சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் கல்வி அதிகாரிகள் பாடசாலைக்கு சென்று வாழ்த்தினார்கள்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அகில இலங்கை தேசிய சமூக விஞ்ஞான போட்டி-2023 பெறுபேறுகள் வெள்ளிக்கிழமை வெளியாகின. இதில் சம்மாந்துறை வலயத்தில் மூன்று மாணவர்கள் சாதனை படைத்தனர்.

சம்மாந்துறை வலயத்தில் உள்ள மஜீத் புரம் மகா வித்தியாலய மாணவி கே.எம். எவ். அசீமா,(தரம்12ஃ13), விவேகானந்த மகா வித்தியாலய மாணவி எஸ்.குகதர்சனா,(-தரம்-09),இறக்காமம் அஷ்ரப் ம.கல்லூரி எம். கே..யூசுப்சயான்(தரம்-07) ஆகியோர் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றுள்ளனர்.

அவர்களை அவர்கள் கற்கும் பாடசாலைக்குச்சென்று வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள் வாழ்த்தி கௌரவித்தார்கள்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம். வை.அறபாத், எ.எல்.எம்.மஜீத், உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.எம். நிஷார் ஆகியோர் பாராட்டச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# விளக்கமறியல்

(பாறுக் ஷிஹான்)

மாணவனின் மர்ம மரணம் தொடர்பிலான சிசிடிவி காட்சி உள்ளடங்கிய முக்கிய தடயப்பொருள்களை அழித்த குற்றச்சாட்டு அடிப்படையில் மௌலவி உட்பட 4 சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு வியாழக்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் மௌலவி உட்பட சிசிடிவி காணொளிகளை அழித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 4 சந்தேக நபர்களும் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த சம்பவத்தில் கைதான மௌலவி உட்பட ஏனைய கைது செய்யப்பட்ட 30 ,26, 22, 23 ,வயது மதிக்கத்தக்க 4 சந்தேக நபர்களையும் கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட் போது எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மேலும் கடந்த நீதிமன்ற தவணையின் போது விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட குறித்த வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி உட்பட ஏனைய தரப்பினரின் விடயங்களை ஆராய்ந்த நீதிவான், நீண்ட சமர்ப்பணத்தின் பின்னர் மத்ரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பில் சிசிடிவி காட்சி உள்ளடங்கிய முக்கிய தடயப்பொருள்களை அழித்த குற்றச்சாட்டு அடிப்படையில் மௌலவி உட்பட 4 சந்தேக நபர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

(05)



## றொனி டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து விடுவிப்பதற்கான யோசனையை சபையில் சமர்பித் தார். ஜே.ஆர் ஜயவர்தனவும் அதற்கு இணக்கம் தெரிவித்தார். அதன்படி இரு கட்சிகளின் தேவையும் நிறைவேற்றப்பட்டதால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் அதிகளவான ஆசனங்கள் கிடைத்தன.

நாடாளுமன்றத்திற்கு வந்த பின்னரே றொனி டி மெலுடன் நெருக்கமாக பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் மிகவும் திறமையாக செயற்பட்டார். நாட்டில் திறந்த பொருளாதாரத்தை உருவாக்கும் பணியும் ஜே.ஆர். ஜயவர்தனவால் றொனி டி மெல்லிடம் ஒப்படைக்கப்பட்டது

ஜுலை மாதத்தில் அந்த பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒக்டோபர், செப்டம்பரில் அந்த பணிகளை முடித்துவிட்டார். அவர் எந்தபணிக்கும் அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. ஒரே தடவையில் அனைத்துச் செயற்பாடுகளையும் செய்து முடிப்பார். அன்று அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட அனுபவத்தையே இன்று செயற்படுத்துகிறேன்.

திறந்த பொருளாதாரம் அமுல்படுத்தப்பட்டால் வீழ்ச்சியைச் சந்திக்க நேரிடும் என பலரும் கூறினர். இன்று நான் திருகோணமலையிலிருந்து ஹெலிகாப்டரில் இங்கு வந்தேன். வரும் வழியில் நாட்டின் பல நகரங்கள் தென்பட்டன. அவை அனைத்தும் நாட்டின் பொருளா தார முன்னேற்றத்தையே காண்பிக் கின்றன.

றொனி டி மெல் இந்த பொரு ளாதாரத்தை திறந்துவிட வில்லையென்றால், இன்று இவற்றை நாம் காண முடியாது. அந்தக் காலத்தில் நகரங்களில் இரண்டு மூன்று கடைகள்தான் இருந்தன. இன்று அநேகமான கடைகள் உள்ளன. தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு புதிய நகரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. திறந்த பொருளாதாரத்தின் மூலமே இந்த வளர்ச்சி ஏற்பட்டது.

நாட்டின் பொருளாதாரத்தை மட்டும் திறந்து விட்டதற்கு மேலதிகமாக, அதன் பிறகு ஜே.ஆர். ஜயவர்தனவின் பெருமள வான அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவசியமான நிதியையும் தேடிக் கொடுத்தார். அதனால் மகாவலி அமைக்கப்பட்டது, பெருமளவான நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டன. காணி அபிவிருத்தி செய்யப்பட்டு விவசாயத் திற்குகாக பெற்றுக்கொடுக்கப்பட்டது. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டது. பல்வேறு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. வீதிகள் அமைக்கப்பட்டன. வர்த்தக வலயங்கள் உருவாக் கப்பட்டன. வீட்டுத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அந்த அனைத்துப் பணிகளுக்கும் நிதியை சேகரித்து அவரது திறமையைக் காண்பித்தார்.

1983 விடுதலைப்புலிகளின் காலத்தில் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என சிலர் நினைத்தனர். ஆனால், அந்தக் காலப்பகுதியில் றொனி டி மெல் நாட்டின் பொருளாதாரத்திற்காக சிரமப்பட்டு முன்னேற்றினார். அவர் இல்லாதிருந்தால் நாட்டில் இந்த வளர்ச்சி ஏற்பட்டிருக்காது.

யோசனைகள் மற்றும் பிரச்சனைகள் மீதான அவரது பார்வையின் அடிப்படையிலேயே அவர் அந்த ஆட்சியிலிருந்த திறமையான உறுப்பினர் என்று கூற முடிந்தது. பொருளாதாரப் பிரச்சனைகளைப் போன்றே ஏனைய பிரச்சனைகளுக்கும் தீர்வு காணும் இயலுமை அவரிடம் இருந்தது.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்ட போது அதற்கும் ஒத்துழைப்பு வழங்கினார். அத்தகைய ஒருவருக்கே இன்று நாம் இறுதி அஞ்சலி செலுத்துகிறோம். மேலும், அவரது வெற்றியின் பின்னணியில் அவரது மனைவி மல்லிகா டி மெல் பக்கபலமாக இருந்தார் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

றொனி டி மெல் அவர்களிடமிருந்து அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், இலக்கியம் மற்றும் மொழி பற்றிய பல்வேறு அறிவைப் பெற்றுக்கொண்டோம். அத்தகைய பரந்த அனுபவம் அவருக்கு இருந்தது. அப்படிப்பட்டவர் அரசியலில் இருப்பது பெரும் பலமாக அமைந்தது.

இந்த ருஹூனு பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கு அவர் அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். றொனி டி மெல் இல்லாவிட்டால் இன்று இந்த இடத்தில் இப்படி ஒரு பல்கலைக்கழகம் இருந்திருக்காது. ருஹூனு பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகராக இறுதிப் பயணம் செல்ல வேண்டும் என்பதே அவரது இறுதி ஆசையாக இருந்தது.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் பங்காற்றிய போதும் ருஹூனு பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்தவராக வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டும் என்றே விரும்பினார்.

றொனி டி மெல்லிடம் பல விடயங்களைக் கற்றுக்கொண்டேன். அவை பிற்காலத்தில் பயன்பட்டன. இன்றும் அவருடன் பணியாற்றிய அனுபவம் எனக்கு ஊக்கமளிக்கிறது.

அவரது இறுதி காலத்தில் ஓய்வூதியம் பெற்ற ஒருவராக நாட்டுக்கான வேலைத் திட்டங் களுடன் இணைந்து கொண்டார். அவரின் மறைவு நம் அனைவருக்கும் இழப்பாகும். றொனி டி மெல் நாட்டிற்கு ஆற்றிய சேவையை நாம் மறந்துவிடக் கூடாது. அவர் இந்த நாட்டில் மாற்றத்தை உருவாக்கிய அரசியல்வாதி. இச்சந்தர்ப்பத்தில், றொனி டி மெலுக்கு இறுதி அஞ்சலியை செலுத்தி அவர் அமைதியாக இளைப்பாற பிரார்த்திக்கிறேன். அவரது குடும்பத்தினருக்கும் எனது அனுதாபங்களை கூறுகிறேன் என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# ஆசையோடு தேசம் காண இருந்தவருக்கு இந்திய அரச அதிகாரம் எமனானது

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம்

தமிழர் தேசக் கனவோடு தாயகம் பிரிந்து, இந்திய ஒன்றியத்தின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு, முழுமை பெறாத நீதி விசாரணையால் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏழு தமிழர்களில் ஒருவராக 33 ஆண்டுகள் சிறைவாழ்வை அனுபவித்து தாயகம் காண காத்திருந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜா எனும் இயற்பெயருடைய சாந்தன் அவர்கள் விரைவில் நாடு திரும்புவார் எனும் தமிழர்களின் எதிர்பார்ப்பும் தாயையும் தாய் மண்ணையும் காண வேண்டும் என்னும் இறுதி ஆசையும் நிறைவேறாமலேயே அவர் உயிர்பிரிந்த செய்தி தமிழர் இதயங்களைக் கனக்க வைத்துள்ளது.

- இவ்வாறு தனது கண்டனச் செய்தியில் வேதனை தெரிவித்துள்ளது யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்.

அந்த கண்டனச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

பெற்ற மகனை ஒரு முறையாவது உயிருடன் பார்த்து விட வேண்டுமென்ற தாய்க்கும் - மகனுக்கும் இடையிலான 33 ஆண்டுகள் பாசப் போராட்டத்தில் சாந்தனின் இழப்பு அனைவரையும் வெடித்தழ வைக்கின்றது. மரணம் நிகழ்ந்த 28 ஆம் திகதி காலையில் கூட மகன் வருவான் என்று கோவில் தீர்த்தத்துடன் காத்திருந்த தாய்க்கு வாழ்நாள் ஏக்கம் கனவாய்ப் போனது பெருந்துயர்! ஏதும் அறியா இளைஞனாக தமிழகம் வந்தவரை மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாகச் சிறைப்படுத்தி, சித்திரவதை செய்து நீண்ட நெடிய சட்டப் போராட்டங்களின் பின்னர் 11.11.2022 ஆம் திகதி இந்திய ஒன்றிய உச்ச நீதிமன்றம் விடுதலை செய்த பின்னரும் இயற்கை நீதிக்கு முரணாக தொடர்ந்து 15 மாதகாலம் திருச்சி சிறப்பு முகாமில் தடுப்பில் வைத்திருந்து உடல், உள ரீதியாய் பலவீனப்படுத்தி சிறுகச் சிறுகச் கொன்று தாயையும் தாய் மண்ணையும் காண ஆவல் கொண்டிருந்தவரை இன்று உயிரற்ற சடலமாய் அனுப்பி வைத்திருக்கிறது இந்தியம்.

பாரத தேசத்தின் பிராந்திய நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டு தொடர்ந்தும் அவமதித்து வரும் சிறிலங்கா அரசுடன் நட்புப் பாராட்டும் காந்தி தேசம், தங்களின் அற்ப பூகோள நலன்களுக்காக தங்களை நோக்கி என்றுமே நேசக்கரம் நீட்டும் ஈழத்தமிழ் மக்களைத் வஞ்சிப்பதென்பது அந்த நாடு இதுவரை காலமும் தான் கொண்ட வரலாற்றுக்கும் பெருமைகளுக்கும் இழுக்கானதாகும்.

அன்று முதல் இன்று வரை காந்தியின் பெயர்கொண்டு, புரியும் கொடுரங்களால் தனக்கு மேல் போர்த்திய போர்வை களைந்து நிர்வாணமாய் நிற்கின்றது காந்தி தேசம்.

29.02.2024 அன்று நடந்த நீதிமன்ற வாதங்களில் தமிழக அரசு வழக்கறிஞரின் கூற்றுப்படி தமிழக அரசே சாந்தனை விடுவிப்பதில் காலந்தாழ்த்தியது எனும் துயரச் செய்தி, எமக்காய் தமிழக உறவுகளும் தமிழக அரசும் நிற்பார்கள் என்று நம்பும் ஈழத்தமிழ் மக்களிற்கு துரோகச் செய்தியாய்ப் போனது இன்னுமொரு பெருந் துயரம்!

சாந்தன் அவர்களைத் தாயகம் அழைத்து வருவதற்கு இறுதி ஒரு மாதகாலத்திற்குள் காணப்பட்ட ஏதுநிலையை குறிப்பிட்ட சில காலங்களுக்கு முன்னதாகவேனும் உருவாக்கிட நடவடிக்கை ஏதும் எடுத்திருந்தாற் கூட பெற்ற தாயைக் காண வேண்டும் எனும் இறுதி ஆசையையேனும் நிறைவேற்றிக் கொடுத்திருந்திருக்கலாம். ஆனால், ஏழு தமிழர்கள் இந்திய ஒன்றிய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட ஒன்றாண்டு காலப்பகுதிக்குள் ஈழத்தமிழ் அரசியல் தலைமைகள் கூட்டாக ஒரு தீர்க்ககரமான தீர்மானங்களெதனையும் மேற்கொள்ளாது, அசமந்தமாகவும் அலட்சியப் போக்குடனும் செயற்பட்டமை என்பது மன்னிக்க இயலாத கண்டனத்திற்குரியதொன்று.

நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் இயற்கை நீதிக்கு விரோதமாக சிறப்பு சித்திரவதை முகாம்களில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள எஞ்சியுள்ளவர்களையும் விடுதலை செய்து ஈழத்தமிழர்களை சிதைத்தெடுக்கும் சித்திரவதை முகாமிற்கு இனியாவது முடிவுரையெழுத இந்திய ஒன்றிய, மாநில அரசுகளை வேண்டுகின்றோம்.

ராஜீவ்காந்தி கொலையில் குற்றஞ்சாட்டப்பட்ட ஏனைய மூன்று ஈழத்தமிழர்களையும் அவர்கள் விரும்பும் இடங்களில் வசிப்பதற்கு அனுமதிக்க வேண்டுவதோடு, தாயகம் திரும்ப எவரேனும் விரும்பினால் அவர்களை அழைத்து வர இனியாவது உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஈழத்தமிழ் அரசியல் தரப்புக்களையும் சிறிலங்கா, இந்திய அரசுகளையும் வலியுறுத்துகின்றோம்.

நீதியைக் காத்து நிலைநாட்டுவதில் பக்கம் சாராமல் இந்திய உச்ச நீதிமன்றம் மரண தண்டனை விதிக்கப்பட்ட காலம் முதல் அவர்களின் விடுதலைக்கான காலம் வரையில் காலத்திற்குக் காலம் எத்தனையோ வாய்ப்புக்களை வழங்கியும் இந்திய ஒன்றிய அரசும் தமிழக அரசும் தொடர்ச்சியான சட்ட செயற்பாடுகளின் மூலம் தாமதப்படுத்தியமை என்பது ஈழத்தமிழ் மக்களின் மீதான கசப்புணர்வையே வெளிப்படுத்தியிருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. இனிமேலாவது ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளிற்கு விரோதமான செயல்களிற்கு முற்றுப்புள்ளி வைத்து, ஈழத்தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க உளச்சுத்தியுடன் இந்திய அதிகாரம் செயற்பட வேண்டுகின்றோம்.

உயிரோடு வந்தவரை இன்று உயிரற்று அனுப்பி வைத்துள்ளது பாரதம்!

சாந்தனின் இறப்பு காந்தி தேசத்தின் அவலக் குறியீடு! - என்றுள்ளது. (05)

# கல்முனையில் திண்மக் கழிவகற்றலை மேம்படுத்துவது தொடர்பில் ஆராய்வு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகரில் திண்மக் கழிவகற்றல் சேவையை மேம்படுத்துவது தொடர்பாக கல்முனை மனிதவள அபிவிருத்தி அமைப்பு ஏற்பாடு செய்திருந்த விசேட கலந்துரையாடல் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் வியாழனன்று நடைபெற்றது. கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி முன்னிலையில் அமைப்பின் தலைவர் வைத்தியர் எம்.எச். ரிஸ்பின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜெளஸி, சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.பாயிஸ், கல்முனை ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி முர்ஷித் முப்தி, உப தலைவர் மௌலவி அப்துல் ஹமீட் உட்பட மனிதவள அபிவிருத்தி அமைப்பின் உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

இதன்போது கல்முனை மாநகரம் திண்மக் கழிவகற்றல் செயல்பாடுகளில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் மற்றும் சவால்கள் அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள், கல்முனை மாநகர சபைக்கு பொது மக்கள் வழங்க வேண்டிய ஒத்துழைப்புகள், அதற்கான வழிகாட்டல்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலும் எதிர்காலத்தில் திண்மக்கழிவகற்றல் சேவையை வினைத்திறன் மிக்கதாகக் கட்டியெழுப்புவதற்கான மூலோபாயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

அதேவேளை கல்முனை மாநகர சபையை பொறுப்பேற்றமை முதல் கடந்த ஒன்றரை வருட காலமாக வினைத்திறனுடன் நேர்த்தியான சேவைகளை வழங்கி வருகின்ற ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி அவர்களை கல்முனை மனிதவள அபிவிருத்தி அமைப்பு மற்றும் கல்முனை ஜம்இய்யத்துல் உலமா சபை என்பன இணைந்து நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவித்துள்ளன. (05)

# கல்முனை கடற்கரை பள்ளிவாசலுக்கு அண்மித்த வீதியை விசாலமாக்க முடிவு



(நூருல் ஹுதா உமர்)

சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் புகழ்பெற்ற கல்முனை நாகூர் ஆண்டகை தர்கா ஷரீஃப் அமைந்துள்ள கல்முனை கடற்கரை பள்ளிவாசலுக்கு முன்னாள் அமைந்துள்ள கடற்கரை வீதி மக்களின் அதிக வருகை காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதையும், வெள்ளிக்கிழமைகளில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைவதையும் கவனத்தில் கொண்டு அந்த வீதியை விசாலமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தலைமையில் இந்த கள விஜயத்தில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் அஸ்மி ஆதம்லெப்பை, மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜெளஸி, கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஏ. ஹலீலுர் ரஹ்மான், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர்கள் உட்பட கல்முனை மாநகர சபை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது குறித்த பிரதேசத்துக்கு விஜயம் செய்யும் பொதுமக்களின் வாகனங்களின் தரிப்பிடம் தொடர்பிலும் கவனம் செலுத்தியதுடன் குறித்த வீதியை விரிவாக்கத் தேவையான விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டதுடன் குறித்த பிரதேசத்தை மின்விளக்குகள் மற்றும் இருக்கை வசதிகளைக் கொண்டு அழகுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. வேலைத்திட்டம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை கல்முனை மாநகர சபை முன்னெடுக்கிறது.

(05)

# கல்முனை கல்வி வலயத்தின் மற்றும் ஒரு சாதனை நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

2023 இல் நடைபெற்ற தேசிய மட்ட சமூக விஞ்ஞான போட்டியில் கிழக்கு மாகாணத்தில் முதலிடம் 04 மாணவர்களும், இரண்டாம் இடம் 11 மாணவர்களும், மூன்றாம் இடம் 08 மாணவர்களுமாக 23 இடங்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. இதன் அடிப்படையில் 17 வலயங்களில் 09 வலயங்கள் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களை பெற்றுள்ளன. இதில் கல்முனை கல்வி வலயம் ஐந்து இடங்களை பெற்று மாகாணத்தில் முதலாவது இடத்தை பெற்றுக் கொண்டுள்ளது.

இதில் கல்முனை கல்வி மாவட்டத்திற்கான ஒன்பது இடங்களில் கல்முனை கல்வி வலயம் ஐந்து இடங்களை பெற்று கல்முனை கல்வி மாவட்டத்திலும் முதலாவது இடத்தை பெற்றுக் கொண்டுள்ளது. அதில் கல்முனை வலயம் 05 இடங்கள், சம்மாந்துறை வலயம் 02 இடங்கள், அக்கரைப்பற்று வலயம் 02 இடங்கள் பெற்றுக்கொண்டுள்ளன.



இந்த மாபெரும் வெற்றிக்கு ஒத்துழைப்பு வழங்கிய பாடசாலை அதிபர்களுக்கும், சமூக விஞ்ஞான பாடங்களை கற்பித்த ஆசிரியர்களுக்கும், சமூக விஞ்ஞான போட்டிக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்திய ஆசிரியர்களுக்கும், வலயத்தின் விடய இணைப்பாளராக செயற்பட்ட ஆசிரிய ஆலோசகர் பி.டீ. எம். மஹ்றுப் அவர்களுக்கும், ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கிய பிரதிக் கல்விப்பணிப்பாளர்காளான பீ.ஜிஹானா ஆலீப், எம்.எச். றியாஸா, ஆசிரிய ஆலோசகர் கே. டேவிட் ஆகியோருக்கு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ்.சஹுதுல் நஜீம் நன்றிகளை வலயம் சார்பாகத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# இரணைமடு ஏற்று நீர்ப்பாசனத்தின் மூலம் 499 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கை





இரணைமடு குள நீரைப்பயன்படுத்தி மேற்கொள்ளும் ஏற்று நீர்ப்பாசன உப உணவு பயிர்ச்செய்கை அளவை தீர்மானிக்கும் கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன மண்டபத்தில் நடைபெற்றது.

கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் க.கருணாநிதி, கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசன பிரிவு பொறியியலாளர் ச.செந்தில்குமரன், கிளிநொச்சி மாவட்ட மாகாண பிரதி விவசாய பணிப்பாளர் சூ.ஜெகதீஸ்வரி, கமநல காப்புறுதிச்சபை உதவிப்பணிப்பாளர் பூரணச்சந்திரன் ,விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் சிவனேசன் ,கிராம சேவகர், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

(05-113)

# நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் ஒரு செயல் வீரன் என புகழாரம்

## வவுனியா பிரதேச செயலாளர் சூட்டினார்

கூட்டங்களில் கேள்வி கேட்கும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர் போல் அல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் ஒரு செயல் வீரன் என வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் புகழாரம் சூட்டினார்.

வவுனியா, மாகாறம்பைக்குளம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் -

வவுனியா விபுலானந்தாக் கல்லூரிக்கு மைதானத்தை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட காலமாக நாம் கதைத்துக் கொண்டிருக்கின்றோம். எனினும் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் நேரடியாக காணி ஆணையாளர் நாயகத்திடம் கடிதத்தின் பிரதிகளையும் கொண்டு சென்று இந்தப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு வேண்டும் எனக் கேட்டதன் அடிப்படையில் தீர்வு மிக விரைவில் கிடைக்கும்.

ஆணையாளர் நாயகம் எம்மிடம் மூன்று விடயங்களைக் கேட்டு இருக்கின்றார். அவை மூன்றும் ஒரு வார காலத்துக்குள் அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் அந்த 2000 மாணவர்களுக்கான மைதானம் இல்லாத பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்க இருக்கின்றது.

கூட்டங்களில் கேள்வி கேட்கின்ற நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாமல் அவற்றைச் செய்து காட்டுகின்ற ஒரு செயல் வீரனாகவும் திலீபன் நாடாளுமன்ற உறுப்பினர் இருக்கின்றார் எனத் தெரிவித்தார்.

(05-100)

# காணி உரிமங்கள் வாகரை மக்களுக்கு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவில் உதித்த உரிமை வேலைத்திட்டத்தின் கீழ் அளிப்பு, பூரண அளிப்பு மற்றும் காணி அனுமதிப்பத்திரங்கள் என்பன தேசிய ரீதியில் வழங்கப்பட்டு வரும் நிலையில், வாகரையில் இடம்பெற்ற காணி உரிமங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதிகளாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்ததோடு பயனாளிகளுக்கான காணி அனுமதிப்பத்திரங்களையும் வழங்கி வைத்தனர்.

பிரதேச செயலாளர் எந்திரி ஜீ.அருணன் தலைமையில் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற குறித்த நிகழ்வில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் 150 பூரண அளிப்புக்களும் 400 காணி அனுமதிப்பத்திரங்களும் வழங்கிவைக்கப்பட்டிருந்தன.



இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன், மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரின் பிரத்தியேக செயலாளரும், தேசிய அமைப்பாளருமான த.தஜீவரன், உள்ளிட்ட ஆளுநரின் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# கற்பிட்டி 'கயிடெக்ஸ் 17' அமைப்பின் இலவச கருத்தரங்கு கலந்துரையாடல்

(எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவர்களுக்கான கணிதபாட இலவச ஐந்து நாள் தொடர் கருத்தரங்குகள் தொடர்பான மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடனான கலந்துரையாடல் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் பிரதி அதிபர் எஸ். எப் சாஜினாஸ் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலை கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் 2017 ஆம் ஆண்டு சாதாரண தர பரீட்சை எழுதி தற்போது பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் 'கயிடெக்ஸ் 17' அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டது.

கயிடெக்ஸ் 17 அமைப்பின் தலைவர் ஏ.எச் முசாரப் உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு -

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவர்களின் இறுதி பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் கணிதபாட சித்தி வீதம் குறைவடைந்துள்ளதை கருத்தில் கொண்டு நாம் கல்வி கற்ற பாடசாலைக்கு எமது கயிடெக்ஸ் 17 அமைப்பின் ஊடாக முதன் முறையாக இலவச கருத்தரங்குகளை நடத்துவதற்கு திட்டமிட்டுள்தாகத் தெரிவித்தார்.

(05)

# திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வை நிறுத்தக்கோரி பொதுமக்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள இல்மனைட் அகழ்வை உடனடியாக தடை செய்யக் கோரிக்கை விடுத்து பொது மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றைத் திருகோவிலில் நடத்தியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் திருக்கோவில் பிரதேச பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு இருந்ததுடன் இந்தக் கண்டனப் பேரணி திருக்கோவில் மணிக்கூண்டுக் கோபுரத்தில் இருந்து ஆரம்பமாகி திருக்கோவில் பிரதேச செயலகம் வரை சென்று நிறைவடைந்து இருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்கொண்டிருந்த பொது மக்கள் திருக்கோவில் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள இல்மனைட் அகழ்விற்கு எதிராக கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி இருந்ததுடன் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் அவர்களிடம் மகஜர் ஒன்றையும் கையளித்து இருந்தன.

இந்த ஆரப்பாட்டப் பேரணியில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடிஸ்வரன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி இருந்தனர்.

(05)

# புத்தளம் லெஜன்ட்ஸ் சுப்பர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் நகரில் தலைசிறந்த உதைபந்தாட்ட போட்டித் தொடர்களை நடாத்திய புத்தளம் லெஜன்ஸ் கழகத்தின் ஸ்தாபகர் முஹம்மது யமீன் அவர்களின் முயற்சியில் 'லெஜன்ஸ் சுப்பர் லீக்' எனும் பெயரில் அணிக்கு ஒன்பது பேர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்ட தொடர் நேற்று (சனிக்கிழமை) காலை 8.30 மணி புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெற்றது. மொத்தமாக எட்டு அணிகள் கலந்து கொள்ள உள்ள இந்த தொடரில் புத்தளத்தை சேர்ந்த இரண்டு அணிகள் மற்றும் புத்தளம் மாவட்டத்துக்கு வெளியில் உள்ள ஆறு அணிகள் பங்குபற்றின.

புத்தளம் அணிகள் சார்பாக புத்தளம் லிவர்பூல் கழகம் மற்றும் நிவ் ஸ்டார்ஸ் கழகங்கள் பங்கு பற்றின.

வெளி மாவட்ட அணிகளாக ட்ரின்கோ எப்.சி திருகோணமலை, கார்டியன் எப்சி. குருநாகல், எவர்க்ரீன் கழகம் கலகெதர, லைட் இன்பென்ட்ரி கழகம் கண்டி, கெடேரியன் கழகம் கொழும்பு இலவன் ஸ்டார் கழகம் பரஹதெனிய ஆகிய அணிகள் பங்கேற்றன.

இலங்கை இராணுவ அணி வீரர்கள், கடற்படை அணி வீரர்கள் மற்றும் இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணி வீரர்கள் என பல்வேறு வீரர்கள் இதில் கலந்து கொண்டனர்.

(05)

# தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு அமைச்சர் ஜீவன் பிறந்தநாள் வாழ்த்து

மலையக மறுமலர்ச்சிக்கான பயணத்தின் போது இங்குவாழும் தொப்புள் கொடி உறவுகளுக்கு தமிழக அரசும் முழுமையான ஒத்துழைப்பை முதல்வர் மு.க. ஸடாலின் தலைமையில் வழங்கும் என உறுதியாக நம்புகின்றேன் என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை மக்களுக்கு தமிழக அரசு வழங்கி வரும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்துள்ள ஜீவன் தொண்டமான், தமிழ்மொழியைக் காப்பதற்காக முதல்வர் ஸ்டாலின் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் காலத்தின் கட்டாய தேவைகளாகும் எனவும் கூறியுள்ளார்.

மு.க. ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு வாழ்த்து செய்தி அனுப்பியுள்ள ஜீவன் தொண்டமான் கூறியவை வருமாறு

-இன்று அகவை தினம் காணும் தமிழக முதல்வர் மதிப்புக்குரிய மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவர் தேக ஆரோக்கயத்துடன் மக்களுக்கு தொடர்ந்து சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்.

தமிழக மக்களால் மட்டும் அல்ல உலக வாழ் தமிழ் மக்களால் நேசிக்கப்படும் முதல்வர் ஸ்டாலின் அவர்களின் வெற்றி பயணம் தொடரவும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.' என்றுள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

### வவுனியா அல் இக்பால் மகாவித்தியில்

# சிறப்பாக இடம்பெற்ற மாணவர் வரவேற்பு





வவுனியா, அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் தரம் 6 மாணவர் வரவேற்பு நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது. பாடசாலையின் முதல்வர் ஏ.கே. உபைத் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலையின் பிரதான வீதியில் இருந்து பாடசாலை பான்ட் அணி வகுப்பு மரியாதையுடன் புதிதாக தரம் 6 இல் கல்வி கற்க வரும் மாணவர்கள் அழைத்து வரப்பட்டதுடன், தரம் 7 மற்றும் தரம் 8 மாணவர்கள் புதிய மாணவர்களுக்கு மலர் கொடுத்து வரவேற்றனர்.

அத்துடன், மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் மாணவர்களின் விடயத்தில் பெற்றோர்களின் பங்கு தொடர்பில் கருத்துரைகள் இடம்பெற்றன. மாணவர்களின் வருகையை நினைவுபடுத்தி பாடசாலை கற்றல் சூழலை மேலும் மெருகூட்டும் முகமாக மர நடுகையும் இடம்பெற்றது.

இதில் பாடசாலையின் ஆசிரியர்கள், இஸ்லாமிய மதகுருமார், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர. .(05-100)



# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 12 ஆவது சர்வதேச ஆய்வரங்கு

(நூருல் /ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் "Digital Transformation for a Sustainable Future" எனும் தொனிப்பொருளில் 12 ஆவது சர்வதேச ஆய்வரங்குக்கு, ஐவெளுலஅ 2024 இணைப்பாளர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா அவர்களது தலைமையில் 2024.03.01 ஆம் திகதி பல்கலைக்கழக பிரதான கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இரண்டு கட்டங்களாக இடம்பெற்ற நிகழ்வுகளில் ஆரம்ப நிகழ்வாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்கள் அங்கு நிறுவப்பட்டிருந்த வர்த்தக காட்சிக் கூடங்களை திறந்து வைத்தார்.

IntSym 2024 இணைப்பாளர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா அவர்களது தலைமையுரையுடன் ஆரம்பமான நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்ட உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்கள் பிரதம அதிதியுரையாற்றினார்.

நிகழ்வின் போது ஐவெளுலஅ 2024 பிரதம ஆசிரியர் கலாநிதி எம்.பி.எம். இர்ஷாட் அவர்கள் ஐவெளுலஅ 2024 ஆசிரியர் குழாம் மற்றும் ஆய்வரங்குக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் அவற்றை தெரிவு செய்த வழிமுறைகள் தொடர்பான கருத்துக்களை வெளியிட்டார். பின்னர் IntSym 2024 Abstracts Book வெளியிட்டு வைக்கும் இடம்பெற்றது.

12 ஆவது சர்வதேச ஆய்வரங்கின் பிரதான பேச்சாளரான பிரித்தானியாவின் Gloucestershire பல்கலைக்கழகத்தின் Head of School of Computing and Engineering பேராசிரியர் Kamal Bechkoum அவர்கள் கலந்துகொண்டு "Digital Transformation for a Sustainable Future" எனும் தொனிப் பொருளில் நீண்டதொரு உரையை ஆற்றினார். பின்னர் உள்ளூர் தொழில் முனைவோர்களான அப்துல் கபூர் முகம்மட் சாமில் மற்றும் நெய்னா முகம்மட்றிஸ்மிர் ஆகியோர் தங்களது தொழில் அனுபவங்கள் தொடர்பான கருத்துக்களை வெளியிட்டனர்.

Digital Transformation for a Sustainable Future Industry Dialogues 2024 தொடர்பான குழு விவாதம் ஒன்றும் இடம்பெற்றது. இதற்கு மதிப்பீட்டாளராக தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் எம்.எச். தௌபிக் அவர்கள் செயற்பட்ட அதேவேளை குழுவின் பேச்சாளர்களாக பிரித்தானியாவின் புடழரஉநளவநசளாசைந பல்கலைக்கழகத்தின் Head of School of Computing and Engineering Nguhrpupau; Kamal Bechkoum அவர்களும் தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி டபிள்யு. ஜி.சி. டபிள்யு. குமார அவர்களும், டீஊயுளு கேம்பஸின் ஸ்தாபகரும் நிறைவேற்று பணிப்பாளரும் தற்போதைய Chairman/CEO-EduGate International பொறியலாளர் அப்துர்ரஹ்மான் அவர்களும், தமிழ்நாடு அன்னை திரேஷா பெண்கள் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி°.B. Beulahbel Bency அவர்களும் கலந்து கொண்டனர்.

முதல் அமர்வின் இறுதி நிகழ்வாக IntSym 2024 உதவி செயலாளர் விரிவுரையாளர் ஏ.ஆர்.எப். தபானி அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

நிகழ்வுகளை தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம். முகம்மட் ஸிராஜ் அவர்கள் தொகுத்து வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது அமர்வில் ஐவெளுலஅ 2024 க்கு ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்திருந்தோர் தங்களது கட்டுரைகளை முன்னிலைப்படுத்தி விவாதித்தனர். குறித்த 12 ஆவது சர்வதேச ஆய்வரங்கின் போது 200 ஆராச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன.

இரண்டாவது அமர்வுகள் கலை கலாச்சார பீடம், வர்த்தக முகாமைத்துவ பீடம், பொறியியல் பீடம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழி பீடம், தொழில்நுட்பவியல் பீடம் மற்றும் அஷ்ரப் ஞாபகார்த்த பிரதான நூலகம் போன்றவற்றில் இடம்பெற்றன.

நிகழ்வுகளில் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், பதில் பதிவாளர் எம்.ஐ.எம். நௌபர், பதில் நிதியாளர் சி.எம். வன்னியாராச்சி, நூலகர் எம்.எம். றிபாஉடீன், சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட விரிவுரையாளர்கள், உள்ளூர் தொழில் முனைவோர், நிறைவேற்று உத்தியோகத்தர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் என பலரும் பங்குகொண்டிருந்தனர். (05)

# யாழ். மானிப்பாய் வைத்தியசாலை வளர்ச்சிக்காக வெளிநாட்டவர்கள் துவிச்சக்கர வண்டிப் பயணம்





யாழ்ப்பாணம், மானிப்பாய் வைத்தியசாலையின் வளர்ச்சிக்காக வெளிநாட்டவர்களால் துவிச்சக்கரவண்டி பயணம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்த 30 இற்கும் மேற்பட்டோர் துவிச்சக்கர வண்டிப் பயணம் மூலம் நிதி சேகரித்து அதனை யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதியில் உள்ள வைத்தியசாலைக்கு வழங்கி அதனை சகல வசதிகளுடன் கூடிய வைத்தியசாலையாக மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதற்கான துவிச்சக்கர வண்டிப் பயணமானது கண்டியில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து அங்கிருந்து மாத்தளை ஊடாக தம்புள்ளை வந்து, அங்கிருந்து வவுனியாவை வெள்ளிக்கிழமை வந்து அடைந்தனர். அதன் பின் யாழ்ப்பாணம் நோக்கி குறித்த பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து வந்த ஆண், பெண் எனப் பலரும் இதில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். (05 - 100)

காலைக்கதிர்
Kalaikkathir

# சாந்தன் அண்ணாவின் நினைவை ஜனநாயக ரீதியாக அனுஷ்டிக்க அரசும் பொலிஸும் இடமளிக்கவேண்டும்

## போராளிகள் நலன்புரிச் சங்கம் கோரிக்கை

சாந்தன் அண்ணாவின் நினைவேந்தலை ஜனநாயக ரீதியாக அனுஸ்டிப்பதற்கு அரசாங்கமும், பொலிஸாரும் இடமளிக்க வேண்டும் என போராளிகள் நலன்புரிச் சங்க தலைவரும், முன்னாள் அரசியல் கைதியுமான செல்வநாயகம் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் இடம பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இந்தியாவில் 33 ஆண்டுகள் சிறையில் இருந்து தற்போது இந்திய அரசால் சட்டப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட சாந்தன் அண்ணாவுக்கு எங்களது இறுதி வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, அவரது உடலத்தை விமான நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியாத இழுபறி நிலையில் இருந்தது. இது கூட இந்திய -இலங்கை அரசாங்கங்களின் திட்டமிட்ட ஒரு நடவடிக்கை.

அதேவேளை, அவரது பூதவுடல் வந்ததும் அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று அவரது இல்லத்திற்கு கொண்டு செல்லப்படும்.

அத்துடன், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தொடர்ந்தும் போராளிகள் நலன்புரிசங்கத்திற்கு எதிராக அல்லது போராளிகளுக்கு எதிராக செயற்படுவதாக நாங்கள் உணர்கிறோம். இது இலங்கை அரசாங்கத்தின் தோல்வியாகக் கருது கின்றோம். ஜனநாயக ரீதியில் பொலிஸ் மற்றும் இராணுவதற்திற்கு அறிவித்து விட்டு சாந்தன் அண்ணாவின் அஞ்சலி நிகழ்வுக்கான பதாதைகளை வவுனியா நகரில் காட்சிப்படுத்தியிருந்தோம். நகரில் நின்ற போக்குவரத்து பொலிஸார் இது தொடர்பில் வினவி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் சென்று கதைக்குமாறு கூறினார்கள். அப்போது நாம் அவருக்கு தெரியப்படுத்தி விட்டு தான் கட்டுகின்றோம். - என்றேன்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் தெரிவித்த போது அவர் விருப்பமில்லாத நிலையில் தான் எம்மை பதாதைதகளை கட்ட அனுமதித்தார். அதேபோன்று, கடந்த மாவீரர் தினத்தன்று வவுனியா தபால் நிலையத்திற்கு முன்பாக இராணுவத்தால் காட்சிப்படுத்தப்பட்ட பதாதைகள் தொடர்பில் நான் எதிர்பை வெளிப்படுத்திய போது என்னை வாக்கு மூலம் ஒன்றை வழங்குவதற்கு வருமாறு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து கைது செய்தனர். நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு மறுநாள் மாலையே வீடு சென்றேன். இந்த விசாரணைகளின் போது பொலிஸ் நிலையத்திற்குரிய பொறுப்பதிகாரி, நிர்வாக பொறுப்பதிகாரி போராளிகளை அதாவது எம்மை சுட்டுக் கொள்ளுவோம் என்ற தோரணையில் கூறினார்கள். இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சர் ஆகியோரிடம் ஒரு கோரிக்கை முன்வைக்கின்றோம்.



தாம் விரும்பியவர்களை சுட்டுத் தள்ளும் அதிகாரத்தை பொலிஸாருக்கு வழங்க வேண்டாம். நாங்கள் ஆயுதமற்று இருகின்றோம். இலங்கையின் இறையாண்மைக்கு கட்டுப்பட்டு எந்தவித குற்றச் செயலும் செய்யாமல் இருக்கின்றோம். போராளிகளுக்கு தொடர்ந்தும் செய்யும் அடக்குமுறை மிகவும் பாராதுாரமானது. இது சர்வதேசத்திற்கு நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை மீறுவதாக அமையும். இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்கத்திற்கு ஏற்பட்ட தோல்வியாகவும் கருதுகின்றோம்.

ஜேவிபியினர் கூட கிளர்ச்சிகளை செய்து அவர்கள் சிறை சென்று, தற்போது நாடாளுமன்றம் சென்றுள்ளதுடன், ஜனாதிபதியாக வருவதற்கு கூட முயற்சிக்கின்றார்கள்.

எனவே ஜனநாயக ரீதியாக அரசியல் செய்யவும் எமது மக்களது பிரச்சினைகளை பேசுவதற்கும், பொது பிரச்சினைகளில் பங்காற்றுவதற்கும் எமக்கு அனுமதி வேண்டும். பொலிஸாராலே இராணுவமோ இதற்கு தடையை ஏற்படுத்த வேணடாம். சாந்தன் அண்ணாவின் நினைவேந்தலை ஜனநாயக ரீதியான அனுஸ்டிப்பதற்கும் பொலிஸார் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அரசாங்கமும் ஒத்துழைக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (05 - 100)

# பாக்குநீரினையைக் கடந்து திருமலை சிறுவன் சாதனை

## ஆளுநர் செந்தில் உப்படப் பலரும் தொண்டமான் வாழ்த்து!



(ஹஸ்பர் ஏ.எச்)

பாக்குநீரினையை நீந்திக் கடந்து, திருகோணமலையை சேர்ந்த 13 வயது சிறுவனான தன்வந்த் சாதனை படைத்துள்ளார். அவருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு தனுஸ்கோடியிலிருந்து ஆரம்பித்த சாதனைப் பயணம் தலைமன்னாரை வந்து அடைந்தது.

சுமார் 31.05 கிலோமீற்றர் தூரத்தை எட்டு மணி, 15 நிமிடத்தில் குறித்த சாதனையை தன்வந்த் படைத்துள்ளார். இச்சாதனையை படைத்து கிழக்கு மாகாணத்திற்கு இச்சிறுவன் பெருமை சேர்த்துள்ளார்.


இச்சிறுவன் மேலும் பல சாதனைகளை படைக்க வாழ்த்துக்கள் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். (05)

# வவுனியாவில் மதுபான சாலைக்கு எதிராக சுவரொட்டிப் போராட்டம்

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் புதிய மதுபான சாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொது அமைப்புக்களால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

வவுனியா, பூந்தோட்டம் சந்தி பகுதியில் புதிதாக மதுபானசாலை ஒன்று அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் அதற்கு பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இதனையடுத்து பூந்தோட்டம் மற்றும் அதனை அண்மித்த கிராமங்களில் குறித்த சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.




கிராமமட்ட பொது அமைப்புக்கள் என்று உரிமை கோரி ஒட்டப்பட்டுள்ள குறித்த சுவரொட்டிகளில் பூந்தோட்டம் சந்தியை பிரதானமாகக் கொண்ட கிராம எல்லைகளுக்குள் மதுபானசாலைக்கான அனுமதியை வழங்காதே என்ற வாசகம் அச்சிடப்பட்டுள்ளது. (05 - 100)

# பரப்புரை: ஒரு சமூக....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

பரப்புரை வெற்றி பெறுவதற்கு நேர்த்தியான முழக்கங்கள் அவசியம். முழக்கங்கள் அந்தந்தக் காலகட்டங்களின் தேவையை மக்களிடம் கொண்டுசேர்த்தன, மக்களைத் தலைமையின் கீழ் ஒருங்கிணைத்தன. 'வெள்ளையனே வெளியேறு', 'வந்தே மாதரம்' போன்ற முழக்கங்கள் ஆங்கிலேயர்களின் ஆயுதங்களைவிடக் கூர்மையாக இருந்ததால்தான் நாம் சுதந்திரம் பெற்றோம்.



ஒரு சிறு குழுவால் உருவாக்கப்படும், தவறான உள்நோக்கம் கொண்ட அரசியல் பரப்புரையும் சில நேரங்களில் வெற்றிபெற வாய்ப்பு உண்டு. அப்படி நடந்தால், அது நாட்டின் அழிவுக்கு வழி வகுத்துவிடும் என்பதை அச்சு நாடுகள் இரண்டாம் உலகப் போரின் போது செய்த பரப்புரைகளிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

'வெகுஜன ஊடகங்களில் ஒரு பரப்புரை எந்த அளவுக்குத் திரும்பத் திரும்ப செய்யப்படுகிறதோ, அதைப் பொறுத்தே பரப்புரையின் வெற்றி இருக்கும்' என்பது ஹிட்லரின் நம்பிக்கை. ஆரம்பத்தில் அச்சு நாடுகள் போர்முனையில் பெரும் வெற்றிகளைப் பெற்றுவருவதாகவும், நேச நாடுகள் தோலவியைத் தழுவிவருவதாகவும் வானொலி மூலம் செய்யப்பட்ட பரப்புரை மக்களிடம் வரவேற்பைப் பெற்றது. ஆனால், முடிவுகள் தலைகீழாக இருந்தன. இன்றைய காலக்கட்டத்தில் அரசியல் கட்சிகளின் கொள்கை, தேர்தல் பரப்புரைகள், தொலைக்காட்சி விவாதங்களையும் சமூக ஊடகங்களையும் மட்டுமே நம்பியிருக்கும் நிலை உருவாகிவருகிறது. பரப்புரையின் சாதக பாதகங்கள் மக்களிடையே உருவாகும் எதிரெதிர் குழுக்களால் விவாதிக்கப்படுமாயின், அது ஆக்கபூர்வமான மாற்றத்தைச் சமூக உளவியலில் ஏற்படுத்தும். ஆனால், இந்த விவாதங்கள் செயற்கையாகவும், மக்களின் உளவியலை நோக்கிய மூளைச்சலவையாகவும் இருக்குமாயின் பரப்புரையின் நோக்கம் திரிக்கப்படலாம் அல்லது நீர்த்துப்போகலாம். தேர்தல் காலத்தில் செய்யப்படும் பரப்புரைகள் சாத்தியமானதாக இல்லாவிட்டாலும், வசீகரத்துக்கு ஆட்படத்தக்க மனநிலையில் உள்ளவர்களுக்குத் திருப்தியை ஏற்படுத்தும். அதே நேரம், சாத்தியமான பரப்புரையாக இருந்தாலும், எதிர்மனநிலையில் உள்ளவர்களுக்கு உளவியல் தாக்குதலாகவே அமையும்.

# இலங்கையில் நீதி செத்துவிட்டது என்றவர்கள் உட்கட்சிப் பிணக்குக்கு நீதிமன்றையே நாடினர்

## தமிழ் அரசுக் கட்சியை எள்ளி நகையாடுகிறார் டக்ளஸ்

இலங்கையில் நீதி செத்துவிட்டது என போராட்டம் நடத்தியவர்கள் இன்று தமது உட்கட்சி பிரச்சினைக்கு நீதி வேண்டி இலங்கை நீதிமன்றங்களையே நாடியுள்ளனர் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் சனிக்கிழமை (02) அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கை அரசு தமிழருக்கு நீதியும் வழங்காது தீர்வும் தராது என்றவர்கள், இலங்கை நீதிமன்றங்களில் நம்பிக்கை இல்லை என்றவர்கள், முல்லைத்தீவு நீதிபதி நாட்டை விட்டுப்போனதை வைத்து இலங்கையில் நீதி செத்துவிட்டதென்று மனித சங்கிலிப் போராட்டம் நடத்தியவர்கள், எல்லா பிரச்சினைகளுக்கும் சர்வதேச நீதி விசாரணையே தேவை என்றவர்கள், தமது உட்கட்சி விவகாரத்துக்கு தீர்வு கோரி இலங்கை நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

தமிழ் மக்களின் பிரச்சினை என்றால் அது தீர்ந்துவிடக்கூடாதென்று சர்வதேச நீதிமன்றத்துக்கும் போவோம் என்பார்கள். தமது பிரச்சினை என்றவுடன் அதை இலகுவாக தீர்க்கும் விருப்பத்தோடு இலங்கை நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

இதிலிருந்து இவர்களது அரசியல் நாடக வேடம் முற்றாக கலைந்துவிட்டது" என்றுள்ளது.

# முருகன், பயஸ், ஜெயக்குமாருக்கு உண்மையான விடுதலை வேண்டும்

## அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி வலியுறுத்து

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை முடிந்து விடுவிக்கப்பட்டவர்களான முருகன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் அவர்கள் விரும்பும் நாடுகளுக்குச் செல்ல தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, இந்திய வெளியுறவுத் துறையையும், திமுக அரசின் முதல்வரையும் அதிமுக பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

32 ஆண்டுகால நீண்ட சிறைவாசத்திற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட வயது முதிர்ந்த 3 இலங்கைத் தமிழர்களுக்கு உண்மையான விடுதலை வழங்காத திமுக அரசுக்கு கண்டனம்.

தமிழக சிறையில் 32 ஆண்டுகால நீண்ட சிறைவாசம் அனுபவித்த இலங்கைத் தமிழர்கள் ராபர்ட் பயஸ், ஜெயகுமார், முருகன் சாந்தன் ஆகியோர் 11.11.2022 அன்று உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். இலங்கைக் குடிமக்கள் என்பதால் அயல் நாட்டுக்கு அனுப்பும்வரை நடமாட்டத்துக்கு கட்டுப்பாடுகள் விதித்து திருச்சி சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், கடந்த மாதம் சிறப்பு முகாமின் இத்தகைய மனிதத் தன்மையற்ற நிர்வாகத்தின் காரணமாக திரு. சாந்தன் அவர்களின் உடல்நிலை மிகவும் மோசமடைந்து, எழுந்து நிற்கக்கூட முடியாமல் பல நாட்கள் சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த திரு. சாந்தன், கடந்த 28.2.2024 அன்று உடல்நலக் குறைவால் மரணமடைந்துள்ளது, தமிழக மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அங்கு அவர்கள், சக முகாம்வாசிகள் யாருடனும் பேசவோ பழகவோ, உடற்பயிற்சி நடைபயிற்சி செய்யவோ அனுமதி மறுக்கப்பட்டு தனிமை அறையில், சிறை போலவே அடைக்கப்பட்டிருந்தனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே 32 ஆண்டுகள் சிறையில் வாழ்க்கையை இழந்தவர்கள், விடுதலைக் காற்றை சுவாசிக்கப் போகிறோம் என்று பெருமூச்சு விடும்பொழுது, மீண்டும் சிறப்பு முகாம் எனும் கொடூரம் அவர்களது வாழ்க்கையில் அரங்கேறும் என்று சற்றும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். அதிலும், சிறையில் இருக்கும் அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டு, மூச்சு முட்ட தனிமைச் சிறையினில் அடைக்கப்படுவோம் என்று நிச்சயமாக எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். இதனால், கடுமையான மன உளைச்சலுக்கும், உடல் உபாதைகளுக்கும் ஆளாக்கப்பட்டு இவர்கள் அனைவரும் தவித்து வந்துள்ளனர். சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டதன் நோக்கமே அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பது தான். முகாமில் அடைக்கப்படுவதற்கு முன்பே கூட, எந்த நாட்டுக்குச் செல்லப்போகிறீர்கள் என்று அவர்களுடைய விருப்பத்தை அரசு அதிகாரிகள் கேட்டபொழுது, அவர்கள் இலங்கை சென்றால் ஆபத்து மற்றும் தங்களுக்கு அங்கு வாழ்வாதாரம் எதுவும் இல்லை என்றும், அதனால் வெளி நாடுகளில் வாழும் தங்களுடைய குடும்பத்தினருடன் செல்ல விரும்புவதாகவும் தெரிவித்திருந்தனர். ஆனால், இன்றைய நாள்வரை அவர்கள் விரும்பும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசு எந்தவித முடிவும் எடுத்ததாகத் தெரியவில்லை. இது தொடர்பாக, விடுதலையானவர்கள் தங்களை இலங்கை துணைத் தூதரகத்துக்கு அழைத்துச் செல்லும்படியும், முகாமில் மறுக்கப்படும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் மாவட்ட ஆட்சியர், தமிழ்நாடு முதல்வர், ருஊே ஊசு என தொடர்ச்சியாக பல்வேறு கோரிக்கை மனுக்களை அளித்தபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்தபாடில்லை என்று தெரிவித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. உதாரணமாக, நடைபயிற்சிக்கு அனுமதி கேட்டு பல மாதங்கள் ஆன நிலையில், இந்த விடியா திமுக அரசு குறைந்தபட்சம் இந்த கோரிக்கைக்குக் கூட செவி சாய்க்கவில்லை என்பதில் இருந்தே அவர்கள் எத்தகைய மனிதத் தன்மையற்ற முறையில் நடத்தப்படுகிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

கருணாநிதி முதலமைச்சராக இருந்தபொழுது, ஏப்ரல் 2010-ஆம் ஆண்டு பிரபாகரன் அவர்களுடைய வயதான தாயார் உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவ சிகிச்சைக்காக முதலில் சென்னைக்கு வந்தபொழுது, அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க மறுத்து விமானத்தில் இருந்து இறங்கவிடாமல் திருப்பி அனுப்பியது அப்போதைய மைனாரிட்டி திமுக அரசும், மத்திய காங்கிரஸ் அரசும்தான்.

அதேபோன்று இன்று, விடுதலை பெற்ற திரு. சாந்தனை காலத்தே வெளிநாடு செல்ல மத்திய அரசுடன் பேசி, உரிய அனுமதி வாங்கித் தராத காரணத்தால், இறுதிக் காலத்தில் தனது குடும்பத்தினருடன் வாழ முடியாமல் மரணமடைந்துள்ளதற்கு இந்த நிர்வாகத் திறனற்ற, மனிதாபிமானமற்ற விடியா திமுக அரசே முழு பொறுப்பை ஏற்க வேண்டும்.

இனியாவது, மீதமுள்ள மூன்று பேரின் கோரிக்கைகளை உடனடியாகப் பரிசீலித்து, கண் பார்வை குறைபாடு ஏற்பட்டு தவறான சிகிச்சையில் ஒரு கண்ணில் பார்வையை இழந்த ஜெயகுமார் மற்றும் உடல்நலக் குறைவால் அவதியுறும் ராபர்ட் பயஸ் மற்றும் முருகன் ஆகியோரது கடைசி காலத்தில், எஞ்சிய வாழ்நாளை அவர்களுடைய குடும்பத்தினருடன் வசிப்பதற்கு, திருச்சி முகாமில் தனிமைச் சிறையில் இருந்து அவர்கள் விரும்பும் நாடுகளுக்குச் செல்ல தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, இந்திய வெளியுறவுத் துறையையும், விடியா திமுக அரசின் முதலமைச்சரையும் வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்

# மனித உரிமைகளை மீறியோர் மீது இலங்கையில் நடவடிக்கை தேவை

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வேண்டுகோள்

இலங்கையில் பெரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித உரிமை துஸ்பிரயோகங்களில் ஈடுபட்டவர்கள் என நம்பத்தகுந்த விதத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்களிற்கு எதிராக இலக்குவைக்கப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஐக்கியநாடுகளின் மனித உரிமை ஆணையாளர் வோல்கெர் டேர்க் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை அரசு கடந்த காலத்திலும் தற்போதும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வழக்குகளை தாக்கல் செய்வதற்கான நம்பகதன்மை மிக்க பொறுப்புக்கூறல்நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அவர் மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகள், உலகளாவிய மற்றும் சர்வதேச நியாயதிக்க எல்லைக்கு பொருத்தமான இலக்குவைக்கப்பட்ட நடவடிக்கைகளை இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் என நம்பதன்மை மிக்க விதத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக எடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இலங்கையில் அடிப்படை உரிமைகள் சுதந்திரம் சட்டத்தின் ஆட்சி ஜனநாயக ஆட்சி முறை ஆகியவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய புதிய உத்தேச சட்டங்கள் குறித்து ஆழ்ந்த கவலையடைந்துள்ளார் என்று வொல்க்கெர் டேர்க் மேலும் தெரிவித்துள்ளார்

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் போன்றவை ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்துகின்றன பாதுகாப்பு படையினருக்கு அதிகளவு அதிகாரங்களை வழங்குகின்றன ஒன்றுகூடல் கருத்து சுதந்திரத்தை கடுமையாக பாதிக்கின்றன எனவும் ஐநாவின் மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# முட்டைக்கு அடுத்த வாரம் கட்டுப்பாட்டு விலை

50 ஷரூபாவுக்கும் குறைவான விலையில் முட்டைகளை விற்பனை செய்ய முடியும். ஆகவே எதிர்வரும் வாரம் முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படும் என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

உள்ளூர் மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் முட்டை சந்தையில் 60 முதல் 65 ஷரூபாவுக்கு விற்கப்படுகிறது.இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டையை குறைந்த விலையில் விற்க முடியுமாயின் உள்ளூர் மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகளை விற்க முடியாது முறையான கண்காணிப்பு இல்லாத காரணத்தால் உள்ளுர் பண்ணையாளர்கள் முட்டையின் விலை தமது விருப்பத்துக்கு அமைய தீர்மானித்துக் கொள்கிறார்கள் என நுகர்வோர் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

முட்டையின் விலையேற்றம் தொடர்பில் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிடுகையில்,தற்போதைய வர்த்தக மற்றும் உற்பத்தி ஆகிய காரணிகளை கொண்டு உள்ளூர் மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் முட்டையின் விலையை 50 ஷரூபாவுக்கும் குறைவான விலையில் விற்பனை செய்ய முடியும்.நியாயமற்ற வகையில் முட்டையின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நுகர்வோர் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.ஆகவே எதிர்வரும் வாரம் முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டு,அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்றார்.

# ஐக்கிய அரச இராஜ்ஜிய தூதர் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் இலங்கைக்கான தூதுவர் எச்.ஈ.கலிட் நாசர் சுலைமான் அல்அமீரி (உ.நு. முாயடநன யேளளநச ளுரடயைஅயெ யுடயுஅநசை), வட மாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் வெள்ளிக்கிழமை மாலை சந்தித்து கலந்துரையாடினார்.

வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படக்கூடிய புதிய முதலீடுகள் தொடர்பில் இந்த சந்திப்பின்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன், பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள், காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் உள்ளிட்ட விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

வட மாகாணத்தின் அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் ஆளுநர் தெரிவிக்க, அதற்கு தான் பங்களிப்பு வழங்குவதாக ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் இலங்கைக்கான தூதுவர், ஆளுநரிடம் உறுதியளித்தார்.

# சட்டவிரோத சிகரெட்டுக்கள் நீர்கொழும்பில் சிக்கின

## சந்தேகநபர் ஒருவரும் கைது

*சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட சிகரெட்டுகள் நீர்கொழும்பில் கைப்பற்றப்பட்டன. அவற்றை வைத்திருந்தார் என்கிற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் .*

*கைதானவர் 42 வயதுடையவர் எனவும் இவரிடமிருந்து 600 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர் .*

*இவர் மேலதிக விசாரணைகளுக்காக நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் .*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.03.2024இல் வெளியிடப்பெற்றது.